
# சந்நிதியான்

## அற்புதங்கள்

## பாகம் ஐந்து



ந. அரியரத்தினம்

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

## அற்புதங்கள்

பாகம் ஐந்து

ந. அரியரத்தினம்

2015

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சந்நிதியான் |
| விடயம் | : | அற்புதங்கள் (பாகம் ஐந்து) |
| ஆசிரியர் | : | திரு. ந. அரியரத்தினம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 17-08-2015 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்க்கு |
| பக்கம் | : | 88 |
| அச்சுப்பதிப்பு | : | விவேகா அச்சகம்-கனடா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தில்
முருகப்பெருமான் வேலவனாக வீதி உலா
வருவதற்கு ஆயத்தமாக உள்ள அருள்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே.......................... பக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை - | | 5 |
| ஆசிச்செய்திகள் | - | 9-12 |
| சந்நிதியான் - | ஒன்று | 13 |
| சந்நிதியான் - | இரண்டு | 26 |
| சந்நிதியான் - | மூன்று | 34 |
| சந்நிதியான் - | நான்கு | 43 |
| சந்நிதியான் - | ஐந்து | 49 |
| சந்நிதியான் - | ஆறு | 54 |
| சந்நிதியான் - | ஏழு | 62 |
| சந்நிதியான் - | எட்டு | 69 |
| சந்நிதியான் - | ஒன்பது | 75 |
| சந்நிதியான் - | பத்து | 80 |
| சந்நிதியான் - | பதினொன்று | 84 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே
உண்மையான வாழ்க்கையாகும். இத்தகைய
நிலைக்கு அடியேனாகிய என்னை
ஆளாக்கிய எனது தாய், தந்தை
இருவருக்கும் இந்நூலை
காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் என்ற சமயச்சஞ்சிகையை 1998ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மாத வெளியீடாக வெளியீடு செய்து வருகின்றது.

இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதியான் கருணையுடன் கட்டுரைகளாக தொடர்ந்து 2011ஆம் ஆண்டு வரை மாதாமாதம் பதின்நான்கு வருடங்கள் எழுதி வந்துள்ளேன். அதன் பின்பு புலம் பெயர்ந்து வாழ்ந்து வருவதால் கனடாவில் இருந்தவாறே எனது பணியை தொடர்ந்து வருகின்றேன். சந்நிதியான் அற்புதங்கள் பாகம் நான்கு 17-8-2013இல் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

தற்பொழுது சந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஐந்து என்ற இந்நூல் அதன் தொடர்ச்சியாக கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 17-8-2015.இல் வெளியடப்படுகிறது. இந்நூலில் இடம்பெறுகின்ற முதல் மூன்று நிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்ற நிகழ்வுகள் ஆகும். ஏனைய எட்டு அற்புத நிகழ்வுகளும் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு அடியேன் ஞானச்சுடரில் மாதாமாதம் வெளியிட்ட அற்புத நிகழ்வுகளாகும்.

சந்நிதியான் என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகள் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்து வாழும் சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது எனக் கூறுவதில் தவறு இல்லை எனக் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் என்ற தலைப்பில் வெளிவருகின்ற இந்தக் கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள் இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன் தான் இவற்றை எல்லாம் அடியேனால் தொடர்ந்து எழுத முடிகின்றது என்பதை என்னால் நன்கு உணர முடிகின்றது. அடியேனும், அடியேனது துணைவியாரும் மட்டுமல்ல, எமது இருவரது மூதாதையர்களும் சந்நிதி ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத் தீர்த்தக் கிணற்றினையும் ஆலய வாசற் கதவினையும் எனது தாயாரின் பேரனான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வ. முருகுப்பிள்ளை அவர்கள் தனது திருப்பணி உபயமாக அமைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். இதற்குச் சான்றாக அவருடைய நாமம் தீர்த்தக் கிணற்றின் கட்டில் பொறிக்கப்பட்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்.

இதேபோல வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கந்தசஷ்டிக் காலத்தில் சூரன்போருக்குப் பயன்படுத்தப்படும் பிரமாண்டமான சூரனையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து அவரே உபயமாக வழங்கியுள்ளார். சூரன் பீடத்தில் எனது பூட்டனாராகிய முருகுப்பிள்ளையின் பெயரும் அதற்கு உதவியவர்களது பெயர்களும் 01-10-1898இல் உபயமாக வழங்கப்பட்ட காலக்குறிப்பும் இடம் பெற்றுள்ளது. இதே போன்று எனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாள் வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பன்னிரண்டாம் உற்சவத்தின் பொழுது இடம்பெறும் சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கான கல்யாண மண்டபத்தை தனது உபயமாக அமைத்து எமக்கும் வழிகாட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு ஆலயத்திருப்பணிப் பாரம்பரியம் எமது மூதாதையருக்கு இருந்து வந்தது மட்டுமன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது ஒரு மானசீகத் தொடர்பும் சிறு வயதிலிருந்தே அடியேனது உள்ளத்துக்குள் இருந்து வந்ததையும் என்னால் நன்கு உணர முடிகின்றது. எல்லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானின் பெருங்கருணை. அடியேன் மட்டுமல்ல சந்நிதியானின் பல்லாயிரக்கணக்கான அடியவர்களும் இவ்வாறே பரம்பரை பரம்பரையாக சந்நிதியானுடன் ஏதோ ஒரு வகையான தொடர்பு உள்ளவர்களாக உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து கொண்டிருப்பதையும் எம்மால் உணர முடிகிறது.

இக்கட்டுரைகளில் இடம் பெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் சந்நிதியானது உண்மைச்சம்பவங்கள் என்பதால் உணர்வுகளை மிகைப்படுத்தக் கூடிய சொற்களோ வசனங்களோ இங்கே பயன்படுத்தப்படவில்லை. பாமரமக்களும் வாசிக்கக் கூடியதான இலகுவான இயல்பான சொற்பதங்களே பயன் படுத்தப்பட்டுள்ளன.

அற்புதங்களைத் தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கிக் கொண்டிருக்கும் அடியார்ளுக்கும் இதேபோன்று இந்நூலை கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்வதற்கு எல்லாவகையிலும் அனுசரணை வழங்கிய கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருக்கள் பொ. புவனேந்திரன் ஐயர் அவர்களுக்கும் அழகாகவும் கச்சிதமாகவும் அச்சிட்டு வழங்கிய விவேகா அச்சகத்தினருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை கனடாவில் வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக.

ஓம்முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு
இலங்கை

65 தொன்கிளிப் பார்க்
ரொறன்ரோ, கனடா
647-341-8048



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 14.8.2015இல் அடியார்களின் பக்திப் பரவசத்துடன் இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது.



பிரதம பூசகர்களான பொன் புவனேந்திரன் ஐயர், பொன் இராஜேந்திரா ஐயர், சு. ஞானசேகரம் ஐயர் ஆகியோர் சகிதம் கேடக கலசத்திற்கு பூசை இடம் பெறுகிறது. வள்ளிக் கொடியும் வளர்ந்திருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக - நல்லை

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# அருளாசிச் செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளிவரும் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் பாடசாலை அதிபராகவும் பேரவையினுடைய வளர்ச்சிக்கு அயராது தொழில் செய்யும் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் என்கின்ற தொடர் கட்டுரையை எழுதி வெளியிட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஈழத்தின் பெருமையை நிலை நாட்டும் பல ஆலயங்களுள் சந்நிதி முருகனுடைய ஆலயம் தனித்துவமானது. உடல்நோய், உளநோய் அனைத்தையும் தீர்க்கும் முருகனாக வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் இறைவனாக, அன்றும் இன்றும் என்றும் அன்னதான கந்தன் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய சிறப்பையும் ஆலய வரலாற்றையும் அறியவேண்டியது அனைவரதும் அவாவாக உள்ளது. அதனை ஈடுசெய்யும் பொருட்டு திரு. ந. அரியரத்தினம் அவர்கள் மிகவும் தெளிவாகவும் அனைவரும் விளங்கிக்கொள்ளும் வகையிலும் இந்நூலை எழுதிக் கொண்டு வருவது எல்லோராலும் வரவேற்கத்தக்கதாகும். ஆசிரியர் அரியரத்தினம் அவர்களின் தொண்டு மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். நூல் சிறப்பாக வெளிவந்து முருகனுடைய அருள் அனைவருக்கும் கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றங்கரை வேலழகன் அற்புதங்கள்

பொன்னுத்துரை ஐயர்
புவனேந்திரன் ஐயர்

# ஆசிச் செய்தி

ஆசியாவின் முத்தாக விளங்கும் ஈழ மணித் திருநாட்டின் வடகரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களுடன் ஈழத்தின் அறுபடை வீடுகளில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

பக்தர்களின் பிணி தீர்க்கும் வேலவனாக, அன்னதானக் கந்தனாக, கல்லோடைக்கந்தனாக, காவடிக் கந்தனாக, கந்தசஷ்டி கவசனாக, தமிழ் முருகனாக, பூவரசு மரத்தடியில் இருந்து அருள்புரியும் கருணைக் கடலாம் முருகனின் அற்புதங்களை அடியவர்களுக்கு கட்டுரைகளாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பணியை திரு. ந. அரியரத்தினம் அவர்கள் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றார்கள். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் சிறப்பான பட்டங்களைப் பெற்று அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும், கல்வித்துறைக்கு சிறந்த சேவையாற்றியது போலவே ஆன்மீகத் துறைக்கும் இவர் நீண்டகாலமாக சேவையாற்றிவருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.


சந்நிதி முருகனின் அற்புதங்கள் பாகம் இரண்டு, பாகம் நான்கு ஆகியவை ஏற்கனவே எமது ஆலயத்தில் வெளியிடப்பட்டது. தற்பொழுது பாகம் ஐந்தும் எமது ஆலயத்தில் வெளியிடப்படுவது. எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

கனடா நாட்டிற்கு வந்து வேலவனின் அற்புதங்களை வெளியீடு செய்வதன் மூலம் இங்கே உள்ள அடியவர்களும் அவனது பெருமையையும், சிறப்பையும், கருணையையும் மேலும் விளங்கிக் கொள்வதற்கு அவர் செய்யும் சேவை மகத்தானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நிதியும் தரும் ஸ்ரீ செல்வச்சந்நிதியானின் அருளும் ஆசியும் பொதுப்பணியைச் செய்யும் திரு. ந. அரியரத்தினத்திற்கும் அனைத்து அடியார்களுக்கும் கிடைப்பதற்கு சந்நிதியானை வேண்டி வணங்குகின்றேன்.



ஜேர்மன் சுவாமி (ஜேர்மனி), ஆனைக்குட்டிச் சுவாமி (இங்கிலாந்து), நரிக்குட்டிச் சுவாமி (அவுஸ்ரேலியா) பன்றிக்குட்டிச் சுவாமி (இந்தியா) இவ்வாறு கடல்கடந்து வந்து சுவாமிகள் சந்நிதியல் சங்கமித்திருக்கும் காட்சி - 1958



கதிர்காமத்தைப் போன்று உற்சவ காலத்தில் வீதியுலா வரும்பொழுது மட்டும் வள்ளி அம்மனுடன் சந்நிதியான் உடனிருக்கும் பரவசக் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளால் வடிக்க முடியாத
அற்புத ஆவணம்

# ஆசிச் செய்தி

விவேகானந்த சுவாமிகள் தன் குருநாதர் இராமகிருஷ்ண சுவாமிகளிடம் கடவுளை காண்பியுங்கள் எனக் கேட்டபோது அளிக்கப்பட்ட பதில் "கடவுளை யாரும் யாருக்கும் காட்டி கொள்ள முடிவதில்லை" அவரை நீங்களே தேடிக் கண்டு பிடியுங்கள் என்றார். அந்த அற்புதமான வார்த்தைகளை அனுபவிக்கின்ற ஆயிரம் ஆயிரம் அடியார்கள் செல்வச்சந்நிதியானிடம் இருக்கிறார்கள். பக்திமார்க்கம் என்பது வழிபாட்டு முறைகளில் ஓர்வழியாகும். அது ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டது. அதனை நரம்புகளால் கூட உணர முடியாது. அந்தவகையில் தான் கதிர்காமர் என்பவரை முருகப் பெருமான் தொடர்பு கொண்டார். அந்த ஆரம்பம் தான் அறிவு ஆற்றல் மிக்க ஜேர்மன் சுவாமி, அவுஸ்திரேலிய சுவாமி, சோல்பரிபிரபுவின் தனயன், சுப்பிரமணிய சுவாமி என அழைக்கப்பட்டு வரும் அமெரிக்க பெருமகன் உட்பட பலரும் அங்கே அரவணைக்கப் பட்டிருக்கிறார்கள்.

அதேவேளை சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்பவர்கள் மற்றும் அன்றாட வாழ்விற்குப் போராடி கொண்டு இருப்பவர்களையும் ஆட்கொண்டு பேரருள் பாலிப்பவர் செல்வச்சந்நிதியான்.

அவர் அருளிய அற்புதங்களை அற்புதமாக வார்த்தெடுத்து தந்து வருகிறார் என் பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய நடராஜா அரியரத்தினம் ஆசிரியர். அவர் பணி உயர செல்வச்சந்நிதியான் பேரருள்கிட்ட இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

சாமி அப்பாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - ஒன்று

ஈழத்தில் கதிர்காமம், இந்தியாவில் திருச்செந்தூர் ஆலயம் என்பன எவ்வாறு கந்த புராணகால வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்பு படுகின்றனவோ அதேபோன்று தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் கந்தபுராண கால வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபடுகின்ற ஓர் ஆலயமாகும். முருகப் பெருமானு டைய பிரதிநிதியாக வீரவாகுதேவர் சூரபத்மனுடைய இருப்பிடமாகிய மகேந்திர நகருக்கு சமாதானத்தூ துவராகச் செல்கின்றார். அவ்வாறு கடலைக் கடந்து இலங்கைத்தீவுக்கு மேலாக ஆகாய மார்க்கமாகச் செல்கின்ற பொழுது எம்பெருமானுக்கு சாயரட்சைப் பூசை செய்யவேண்டிய நேரம் நெருங்கிவிட்டதால் இன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கின்ற வல்லி ஆற்றங்கரையில் (தொண்டைமானாற்று ஆற்றங்கரை) வீரவாகுதேவர் தரை இறங்கி அங்கே வேல் ஒன்றை வைத்து முருகப்பெருமானுக்கு வழிபாடு செய்துள்ளார். இதைப் போன்று சூரபத்மனுடைய மகேந்திர நகரிலிருந்து திரும்பிவரும் பொழுதும் இவ்விடத்தில் வீரவாகுதேவர் பூசையை மேற்கொண்டதாக எமது தல வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு கந்தபுராணகால வரலாற்றுச் சிறப்பும் புனிதமும் நிறைந்த ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. இவ்வாறு அழிக்கப்பட்டபின் இதன் வரலாற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது. ஆனாலும் ஆலயத்தின் தற்போதைய வரலாறு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

மருதர் கதிர்காமர் என்ற முருகபக்தரை சந்நிதி முருகன் சிறுவனாக வந்து ஆட்கொண்டு அவரையே தனக்கு ஆலயம் அமைத்து பூசை செய்யுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கட்டளையிட்டுள்ளான். இதற்கிணங்க மருதர் கதிர்காமரால் முருகப்பெருமானுக்கு 30.05.1840இல் பூசை ஆரம்பிக்கப்பட்டதாகக் கருதப்படும் அக்காலப் பகுதியிலிருந்து மருதர் கதிர்காமரின் சந்ததியினரே இன்றும் பூசகர்களாகக் கடமை புரிந்து வருகின்றனர்.

### சனி திருமுழுக்குப் பூசை

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்துடன் தைப்பூசம், வைகாசி விசாகம், ஆனிப்பொங்கல், வேல் அனுப்புதல், வேல் திரும்புதல் சூரன்போர், கார்த்திகைத் திருவிழா போன்றவையும் முக்கியமான தினங்களாக இடம்பெற்று வருகின்றன. இதே போன்று ஒவ்வொரு சனிக்கிழமையும் இடம்பெற்றுவரும் சனி திருமுழுக்குப் பூசையும் ஸ்ரீ செல்வச்சந்திதி ஆலயத்தில் முக்கியமான தினமாக காலம் காலமாக இடம்பெற்றுவருகிறது.

இங்கே நாள் தோறும் நித்திய பூசைப் செயற்பாடுகள் எவ்வாறு இடம்பெற்று வருகிறதோ அதேபோல வாரம்தோறும் வரும் சனிக்கிழமைகளில் சனி திருமுழுக்குப் பூசைக்குரிய அபிஷேகங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த அபிஷேகங்கள் வழமையாக இடம்பெறுகின்ற அபிஷேகங்கள் போன்றவை அல்ல. வித்தியாசமான அபிஷேகத் திரவியங்களால் மேற்கொள்ளப்படுகின்ற புனிதமான அபிஷேகங்களாகும். சந்நிதியானை பல அடியவர்கள் மானிட நிலையில் வைத்து நோக்கி வழிபாடு செய்து வருகின்றனர். இவ்வாறு மானிட நிலையில் வைத்து நோக்கி வழிபடுவதன் ஓர் அங்கமாகவே இந்த சனி திருமுழுக்குப் பூசையும் நோக்கப்படுகிறது. ஆம் இந்த சனி திருமுழுக்குப் பூசை ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனுக்கே உரிய தனித்துவமான சிறப்புக்குரிய பூசையாகும்.

### திரை மறைவு அபிஷேகம்

சனி திருமுழுக்குப் பூசையின் பொழுது அபிஷேகத் திரவியங்களாக எள் எண்ணை, தேசிக்காய், தோடம்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட பலவகையான பழவகைகள், போதியளவு பால், தயிர் என்பன எல்லாம் தாராளமாகப் பயன்படுத்தப்படும். இங்கே பயன்படுத்தப்படும் எள் எண்ணை பூசகர்களாலேயே தயாரிக்கப்படுகிறது. கூடியளவு எண்ணை பிறக்க வைப்பதற்கு கொதிக்க வைத்த தீர்த்தக்கிணற்று நீரும் சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது. மூலஸ்தானத்தில் இடம்பெறும் சனி திருமுழுக்குப் பூசை அபிஷேகங்கள் மிகச் சிறப்பாக பூசகர்களால் மேற்கொள்ளப்படும். வழமையாகப் பூசை நடைபெறும்பொழுது ஒலிக்கும் ஆலயமணி ஒலித்துக் கொண்டிருக்க மூலஸ்தானக் கதவு மூடப்பட்ட நிலையில் அடியார்கள் காண முடியாத நிலையில் அரை மணித்தியாலத்திற்கு மேற்பட்ட நேரம் மூலஸ்தானத்திலுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் இந்த திருமுழுக்கு அபிஷேகம் இடம் பெற்றுக்கொண்டிருக்கும். முக்கியமாக மூலஸ்தானத்திலுள்ள எழுந்தருளி வேல் உட்பட வேல் வடிவிலே அருள் வழங்கிக் கொண்டிருக்கும் மற்றும் சில வேல்களுக்கு இந்த திருமுழுக்கு அபிஷேகங்கள் பூசகர்களால் மிகவும் கவனமாகவும் பயபக்தியுடனும் மேற்கொள்ளப்படும்.



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 1.8.2015இல் சனி திருமுழுக்குபூசை அபிஷேகம் நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக சந்நிதியானை வழிபட வருபவர்கள் அல்லது புதிதாக சனி திருமுழுக்குப் பூசையில் பங்கு கொள்பவர்களுக்கு மூலஸ்தானக் கதவு மூடப்பட்ட நிலையில் அங்கே அப்பொழுது இடம் பெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடுகள் அனைத்தும் விளங்கிக் கொள்ள முடியாத புதுமைகளாகவே இருக்கும். மேலும் மானிட வாழ்வில் ஈழத்து மக்களாகிய நாம் சனி முழுக்கின் பொழுது எள் எண்ணை தேய்த்து, தேசிக்காய் வைத்து எவ்வாறு நீண்ட நேரம் எடுத்து சனி முழுக்கினை எல்லா வகையிலும் நிறைவாக நிறைவு செய்வோமோ அதேபோன்று தான் சந்நிதியானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் சனி திருமுழுக்கு அபிஷேகங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சந்நிதியானிடம் ஆழமான பக்தி கொண்ட அடியவர்கள் சந்நிதியானை நண்பனாக, நெருங்கிய உறவினராக, குடும்ப உறுப்பினராக மானிட நிலையில் நின்று நோக்கி வாய்விட்டுப் பேசி, நியாயம் கேட்டு இவ்வாறு பலவிதமாக வழிபடுவதைக் காண முடியும். அதேபோல பூசகர்களும் சந்நிதியானிடம் உள்ள ஆழமான பக்தியினால் இவ்வாறு மானிட நிலையில் நின்று நோக்கி மேற்கொள்ளப்படும் பூசைச் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்த சனி திருமுழுக்குப் பூசை அபிஷேகங்களும் இடம்பெறுகின்றன.

## சிவ நாகதம்பிரான் மூர்த்தமும் நவக்கிரகங்களும்

சனி திருமுழுக்குப் பூசைக்குரிய அபிஷேகங்கள் மூலஸ்தான மூர்த்திகளுக்கு மட்டுமன்றி விநாயகர், வைரவர் என எல்லா சந்நிதானங்களிலும் இடம்பெறுகிறது. ஆனாலும் சிவ நாகதம்பிரானை நடுநாயகமாகக் கொண்ட நவக்கிரகங்களுக்கு இடம்பெறும் சனி திருமுழுக்குப் பூசை பலவகையிலும் சிறப்பும் மகிமையும் வாய்ந்ததாகும். தலவிருட்சமான பூவரசு மரத்துடன் இணைந்துள்ளதான நவக்கிரகங்களுக்கு இடம்பெறும் இந்த சனி திருமுழுக்குப் பூசைக்குரிய அபிஷேகச் செயற்பாடுகளை அடியார்கள் மிகவும் அருகில் இருந்து கண்குளிரக் காணமுடியும். அத்துடன் இந்த இடத்தில் இடம்பெறும் திருமுழுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைக்குரிய அபிஷேகத்தின் சிறப்பையும் மகிமையையும் நேரடியாக அவதானிக்கின்ற அடியார்கள் திரைமறைவில் மூலஸ்தான மூலவருக்கு எவ்வளவு சிறப்பாகவும் புனிதமாகவும் அபிஷேகங்கள் இடம்பெற்றிருக்கும் என்பதையும் ஊகித்துக்கொள்ள முடியும்.



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நவக்கிரகங்களுக்கு நடுவில் அமைந்துள்ள சிவநாகதம்பிரானுக்கு பிரதம பூசகர் அலங்காரம் செய்யும் காட்சி - 1-8-2015

சிவ நாகதம்பிரானை நடுநாயகமாகக் கொண்டு விளங்கும் அந்த நவக்கிரகங்களுக்கு எள் எண்ணை, தேசிக்காய், பால், தயிர், பழங்கள் எனப் பலவகைப்பட்ட அபிஷேகத் திரவியங்களைச் சாத்தி அபிஷேகம் நடாத்தப்படும்பொழுது அங்கே ஒரு அற்புதம் இடம்பெறும். அங்கே கூடியிருக்கின்ற அடியார்கள் அனைவரும் தங்களை மறந்த நிலையில் இறையருளால் ஈர்க்கப்பட்டு, இறையருளால் இணைக்கப்பட்டு மெய்மறந்து ஆனந்தப் பரவசத்துள் மூழ்கிப் போய்விடுவர். அந்தச் சூழலில் அங்கே முழு நிசப்தம் காணப்படும். முழு அடியவர்களின் கவனமும் அபிஷேகத்தை நோக்கி ஈர்க்கப்பட்டிருக்கும். யாரும் எவருடனும் எந்தவித பேச்சுக்களிலும் ஈடுபடமாட்டார்கள். பல பூசகர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் செயற்பட்டுக் கொணடிருப்பார்கள். அதுவும் சுறுசுறுப்பாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களும் மௌனமாகவே செயற்படுவார்கள்.

அபிஷேகத் திரவியங்கள் அனைத்தும் சாத்தப்பட்ட நிலையிலும் அங்கே அந்த திருமுழுக்கு அபிஷேகம் முற்றுப்பெற்று விடாது. அங்கே இன்னொரு புதுமையும் இடம்பெறும். அபிஷேகத்தின் நிறைவாக மூலஸ்தானத் தீர்த்தக் கிணற்றிலிருந்து தீர்த்த நீர் எடுத்து நவக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வார்கள். வேறு எந்த ஆலயத்திலும் எப்பொழுதும் நாங்கள் பார்த்திராத வகையில் அதிகளவு நீர் கொண்டு அதிகளவு நேரம் எடுத்து அந்த ஜல அபிஷேகம் இடம்பெறும். இது அங்கே கூடியிருக்கின்ற அனைவருக்கும் உற்சாகம் கலந்த ஒரு பக்தி உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் அந்த மூலஸ்தானக் கிணற்று நீர் வற்றிவிடுமோ என்று நாம் சிந்திக்கும் அளவுக்கு அந்த ஜல அபிஷேகம் இடம்பெறும். தீர்த்தக்கிணற்று நீரை கிணற்றிலிருந்து அள்ளுபவர்கள், அதனைக் கொண்டு வந்து பூசகரிடம் கொடுப்பவர்கள், அந்த நீரைப் பெற்று அபிஷேகம் நடாத்தும் பிரதம பூசகர் என எவருமே சளைக்காதும் களைக்காதும் அந்த கைங்கரியங்களில் ஒரு கூட்டுச்செயற்பாடாக ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள்.

சந்நிதியான் ஆலயத்தில் சிவ நாகதம்பிரானை நடுநாயகமாகக் கொண்டு விளங்கும் நவக்கிரக சந்நிதானத்தில் மேற்கொள்ளப்படும் அபிஷேகத் தீர்த்தம் மிகவும் புனிதமானது மட்டுமல்ல, நோய்தீர்க்கும் மருந்தாகவும் அடியார்களால் பயன்படுத்தப்படுகிறது. அந்தப் பூசையில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் அனைத்து அடியார்களும் அந்தத் தீர்த்தத்தை கைகளில் ஏந்தி பயபக்தியுடன் அருந்துவார்கள். சிலர் அந்தத் தீர்த்தத்தை நோய் நொடி உள்ள பகுதிகளில் பூசுவார்கள். இன்னும் சிலர் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்காக சிறிய பாத்திரங்களில் ஏந்துவார்கள். ஆம்! சந்நிதியான் மீது ஆழமான பக்தி கொண்ட அடியார்கள் இந்த புனிதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தத்தை பலவித நிவாரணங்களுக்கும் பயன்படுத்தி பயனடைந்து வருகின்றனர்.

### திருமுழுக்குப் பூசையின் தனித்துவங்கள்

திருமுழுக்குப் பூசை என்பது பொதுவாக ஆகம விதிக்கு உட்பட்ட பல ஆலயங்களிலும் இடம்பெற்றுவருகிறது. அயல் கிராமமான வல்வெட்டித் துறையில் அமைந்துள்ள வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்தின் பன்னிரண்டாம் திருவிழாவின்போது இடம்பெறும் சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கு மறுநாள் சிவபெருமானுக்கு தைலப்பியங்க முழுக்கு இடம்பெறுகிறது. அதாவது சிவபெருமானுக்கு திருமுழுக்கு இடம்பெற்று ஆலாத்தி எடுக்கின்ற செயற்பாடுகள் எல்லாம் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

ஆனால் ஆகமவிதிக்கு அப்பாற்பட்ட ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வாரம் தோறும் வருகின்ற சனிக்கிழமைகளில் இந்த திருமுழுக்குப்பூசை இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. சந்நிதியானுக்கு வாரம்தோறும் இடம்பெற்றுவரும் இந்த திருமுழுக்குப்பூசை தொடர்பாக அடியார்கள் தெரிந்து கொள்ள வேண்டிய மேலும் சில விடயங்களை இங்கே சுருக்கமாக வழங்குகின்றோம்.

1. ஒவ்வொரு சனி திருமுழுக்குப் பூசையின் போதும் மிகச் சிறப்பான நைவேத்தியங்கள் சந்நிதியானுக்கு படைக்கப்படும். சிவ நாகதம்பிரான் சந்நிதானத்தில் படைக்கப்படும் நைவேத்தியம் முழுவதும் பூசையின் நிறைவில் காகங்களுக்கே கொடுக்கப்படும். திருக்கழுக்குன்றத்தில் கழுகுகள் பறந்து வருவதுபோல சந்நிதியில் சரியாக அந்தநேரம் காகங்கள் தாமாகவே அங்கே ஒன்றுகூடும். தற்பொழுது சந்நிதியில் பெரும்பாலும் திருமுழுக்குப்பூசை நிறைவு பெற்றபின் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டுவருகிறது.

2. சில பூசகர்கள் சனிக்கிழமைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப்பூசையை நடாத்தாது மதியம் இடம்பெறும் சனி திருமுழுக்குப் பூசையையே முதற்பூசையாகவும் திருமுழுக்குப் பூசையாகவும் நடாத்தும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

3. சந்நிதியானுக்கு தினமும் அறுபத்து ஐந்து ஆலம் இலைகளில் நைவேத்தியம் படைத்தே நித்திய பூசைகளை பூசகர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதேபோன்றுதான் இந்த சனி திருமுழுக்குப் பூசையினையும் ஆலயப் பூசகர்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் தவறாது மேற்கொண்டு வருகின்றனர். சனிக்கிழமைகளில் அடியார்கள் அபிஷேகங்கள் செய்யவிரும்பினால் அந்த அபிஷேகங்களும் மதியம் இடம்பெறும் திருமுழுக்குப் பூசையுடன் இணைத்தே நடாத்துகின்ற வழமையை பூசகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

4. எல்லா மூர்த்திகளுக்கும் எள் எண்ணையால் திருமுழுக்குப் பூசையின் பொழுது அபிஷேகம் இடம்பெறும். ஆனால் எழுந்தருளி வேலுக்கு மட்டும் நெய்யினால் அபிஷேகம் நடாத்தப்படும். வருடாந்த மகோற்சவத்தின் பொழுது தீர்த்தத்திருவிழா நடைபெறும் சந்தர்ப்பத்தில் எழுந்தருளி வேலவனுக்கு மிகமிக அற்புதமாக அபிஷேகங்கள் நடாத்தப்படுவதை அடியார்கள் கண்குளிரக் கண்டு ஆனந்தப் பரவசம் அடைவார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அந்த ஒருநாள் மட்டும்தான் எள் எண்ணையாலும் எழுந்தருளி வேலவனுக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறது.

5. நவக்கிரகங்கள் அமைந்திருக்கும் சந்நிதியில் நவக்கிரகங்களுக்கு மத்தியில் உள்ள சிவநாக தம்பிரானுக்கும் இந்த திருமுழுக்கு அபிஷேகங்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. இங்கே சிவனுக்குள் விஷ்ணு கலந்திருக்கும் அல்லது சேர்ந்திருக்கும் மூர்த்தத்தை நாம் சிவநாகதம்பிரான் என அழைக்கின்றோம்.

அதாவது சிவனுடைய சக்திக்குள் உமை அம்மையின் சக்தி கலந்திருப்பதுபோல இங்கே சிவனுடைய சக்திக்குள் விஷ்ணுவின் சக்தி கலந்திருக்கும் மூர்த்தத்தையே சிவநாகதம்பிரான் என அழைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள் மிக ஆழமான சமயக்கருத்துக்கள் பொதிந்துள்ளன. அடியவர்களை ஈடேற்றுவதற்கான இவ்வாறான சிறப்பும், புனிதமும் நிறைந்த சிவநாக தம்பிரான் மூர்த்தம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வருவது புதுமையான விடயமே.

6. நாம் மனிதப்பிறவி எடுப்பது எமது பூர்வ புண்ணிய பலனாகும். மனிதப்பிறவி எடுத்த பின்பு எமது வாழ்வியலில் கிரகங்கள்தான் தாக்கம் செலுத்துகின்றன எனக் கூறப்படுகிறது. அடியவர்களை ஈடேற்றுவதற்காக சந்நிதியான் நாடிவந்து குடிகொண்டிருக்கின்ற ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சிவநாகதம்பிரானை நடுநாயகமாகக் கொண்ட நவக்கிரகங்களின் அமைப்புக்கள் தலவிருட்சமான பூவரசு மரத்துடன் இணைந்து மிகச்சிறப்பாக அமைந்துள்ளன.

அதுமட்டுமன்றி ஒவ்வொரு சனிக்கிழமையும் இந்த நவக்கிரகங்களுக்கும் திருமுழுக்கு அபிஷேகங்கள் சிறப்பாக நடாத்தப்படுவதால் அடியார்களும் இயல்பாகவே இந்த நவக்கிரக வழிபாடுகளில் பங்குபற்றி கிரகதோஷ நிவாரணங்களைப் பெற்று தமது வாழ்க்கையில் ஈடேற்றம் பெற்றுவருகின்றனர்.

**தீராத நோய் தீர்ந்த அற்புதம்**

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமே தஞ்சமென வந்து ஆலயத்திலேயே தங்கியிருந்து அங்கே இடம்பெறும் நித்திய பூசைகள், சனி திருமுழுக்குப் பூசைகளில் தவறாது பங்கு கொண்டு சந்நிதியானை வழிபட்டு தீராதநோய்கள் தீர்ந்து குணமடைந்து வருபவர்கள் வரலாறு ஏராளம்.

சில வருடங்களுக்கு முன்பு அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இருபது வயது மதிக்கத்தக்க நந்தன் என்ற இளைஞனுக்கு இடம்பெற்ற ஓர் அற்புத நிகழ்வை அடியார்களுக்கு இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாக வழங்குகின்றோம்.

அளவெட்டியை சொந்த இடமாகக் கொண்ட நந்தன் என்ற இருபது வயது மதிக்கத்தக்க அந்த இளைஞன் ஆலயத்திற்கு வரும்பொழுது வெளிப்படையாக மற்றவர்கள் பார்த்து உணரக்கூடியதான தீராத பல நோய்களுடன் வந்திருந்தான். இந்த இளைஞனுக்கு வயிற்றுக்குள்ளும் நோய்கள் இருந்தன. இதைவிட தலையிலும் கைகளிலும் அவிச்சல் நோய்கள் காணப்பட்டன. இந்த நோயை குணப்படுத்துவதற்கு பெருந்தொகைப் பணம் செலவு செய்தும் பல்வேறு வைத்தியர்களிடம் காட்டி எல்லா வகையான சிகிச்சைகள் மேற்கொண்ட நிலையிலும் அதனை மாற்ற முடியவில்லை. மேலும் எல்லா வைத்தியர்களும் அதனை குணப்படுத்த முடியாதெனவும் கை விரித்துவிட்டனர். இறுதியாக ஆவரங்கால் பகுதியில் ஒரு வைத்தியரிடம் சிகிச்சை பெற்று அதுவும் தோல்வியில் முடிந்தது.

**இந்நிலையில் வைத்தியர்கள் மாற்ற முடியாத நோய்களை மாற்றுகின்றவன் பெரிய வைத்திய நாதனான சந்நிதியான் தான்** என்பதை அனுபவப்பட்ட அன்பர் ஒருவர் மூலம் அறிந்து அந்த அன்பர் உதவியுடன் நந்தன் சந்தியானிடம் வந்து சரணடைந்தான். அவன் சந்நிதியானை நம்பி வந்தது மட்டுமன்றி ஆலயச் சூழலில் உள்ள அருவருக்கத்தக்க பொருட்களையும் கழிவு வாய்க்கால்களையும்கூட கைகளால் சுத்தம் செய்யும் தொண்டினை மேற்கொண்டு சந்நிதியானின் அடிமையாகவே செயற்பட்டுக்கொண்டிருந்தான். அதே நேரம் தினமும் இடம்பெறுகின்ற எல்லாப் பூசைகளிலும் தவறாது பங்கு பற்றி வழிபாடு செய்து வந்தான். அத்துடன் ஆலயப் பூசகர்கள் வழங்குகின்ற பிரசாதங்களையும் சனி திருமுழுக்குப்பூசை அபிஷேகத் தீர்த்தம் உட்பட சந்நிதியானது தீர்த்தத்தையுமே தனது நோய் தீர்க்கும் மருந்துகளாகப் பயன்படுத்தி வந்தான். இந்த இளைஞன் இவ்வாறெல்லாம் செயற்படுவதை அடியேனும் பலமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகவே அவதானித்துள்ளேன்.

ஆலயப் பூசகர்கள் உட்பட அனைவருமே இளவயதுடைய நந்தனின் பரிதாப நிலையைக் கண்டு இரக்கப்பட்டனர். இவ்வாறு எல்லோருமே இரக்கப்படும் ஒரு அடியவர்மீது சந்நிதியான் கருணை காட்டாமல் இருப்பானா? ஆம் சந்நிதியான் கருணையினால் அவனது நோய்கள் பூரணமாகக் குணமடையும் அற்புதம் அங்கே அரங்கேறியது. அதுமட்டுமன்றி அந்த இளைஞன் தற்பொழுது பிரான்ஸ் நாட்டில் சந்நிதியானது அடியவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அங்கே சென்ற பின்பும் சந்நிதியானுக்கு பூசைகள், அபிஷேகங்கள் என்பவற்றை அவ்வப்பொழுது நடாத்தி சந்நிதியான் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 1.8.2015இல் சிவநாததம்பிரானை மையமாகக் கொண்டு விளங்கும் நவக்கிரகங்களுக்கு பிரதம பூசகர் குட்டி ஐயா அவர்கள் அபிஷேக நிகழ்வினை மேற்கோள்கின்றார்.

## கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சனி திருமுழுக்குப்பூசை தொண்டைமானாறு ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்நிதி ஆலயத்தைப்போல் மிகச் சிறப்பாகவும் பக்திப்பரவசத்துடனும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தாயகத்தைப்போலவே சனி திருமுழுக்குப் பூசைக்குரிய பூசை முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் எந்த மாற்றங்களுமின்றி பின்பற்றப்பட்டு வருகிறது.

அதேநேரம் அடியார்கள் பயனடையக் கூடிய சில சிறப்பான செயற்பாடுகளும் இங்கே மேற்கொள்ளப்பட்டு வருவதையும் நாம் காணமுடிகிறது. சிவ நாகதம்பிரானை மையமாகக் கொண்ட நவக்கிரகங்களுக்கு அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்யப்பட்டு நிறைவாக நீரினால் அபிஷேகம் செய்யும் பொழுது அதில் அடியவர்களும் பங்கு கொள்வதற்கு இங்கே சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அதாவது ஒவ்வொரு அடியவரும் மூன்று தடவைகள் தாங்களே தீர்த்தச் செம்பில் தண்ணீர் அள்ளி பிரதம பூசகரிடம் கொடுக்க அவர் அதனைப் பெற்று அந்த அடியவர்கள் சார்பாக நவக்கிரக மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்கின்ற நடைமுறை இங்கே பின்பற்றப்பட்டு வருகிறது.



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நவக்கிரகங்களுக்கு அடியார்கள் ஜல அபிஷேகம் செய்யும் காட்சி(1-8-2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானுக்கு நேர்த்திவைத்து வழிபடுகின்ற அடியவர்கள் இந்த சனி திருமுழுக்குப் பூசையுடன் நேரடியாகத் தொடர்புபட்டே தமது நேர்த்தியை நிறைவு செய்து வருகின்றனர்.

சந்திதியானுக்கு நேர்த்திவைப்பவருடைய விபரங்கள் அடங்கிய அர்ச்சனைத் துண்டு மற்றும் ஒரு ரூபாக் குத்தி நாணயம் என்பவை முறைப்படி மஞ்சள் துணியினால் சுற்றிக் கட்டப்படும். பின்பு அவ்வாறு சுற்றிக்கட்டப்பட்ட நேர்த்தித்துண்டு பிரதம பூசகரினால் மூலஸ்தானத்தில் முறைப்படி வைக்கப்பட்டு அங்கே அது நேர்த்திப் பொருளாகப் பேணப்படும். அதன்பின்பு நேர்த்தி வைத்தவர் ஏழு சனி திருமுழுக்குப் பூசைகளில் தொடர்ச்சியாகத் தவறாது பங்குபற்றி சிவ நாகதம்பிரானை மையமாகக் கொண்ட நவக்கிரக மூர்த்திகளுக்கு நீர் அபிஷேகம் செய்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுவார். இறுதியாக ஏழாவது கிழமை சந்நிதியானுக்கு சிறப்புப்பூசை, அபிஷேகங்கள் மற்றும் அன்னதானம் எல்லாம் வழங்கி தமது நேர்த்தியை நிறைவு செய்வார்.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இவ்வாறு நேர்த்திவைத்து பயனடைந்துவரும் அடியவர்களின் எண்ணிக்கை ஏராளம். இது தொடர்பான அற்புத நிகழ்வுகள் சந்நிதியான் அற்புதங்கள் பாகம் நான்கில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. இங்கேயும் இவ்வாறான அற்புத நிகழ்வு ஒன்றை வழங்குகின்றோம்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - இரண்டு

திரு. சிவபாதம் சுரேந்திரனின் சொந்த இடம் அச்சுவேலி. திருமதி சுதர்சினி சுரேந்திரனின் சொந்த இடம் நல்லூர். இருவரும் தற்பொழுது கணவன் மனைவியாக கனடாவில் பிரம்ரன் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். நிம்மதியான வாழ்க்கை, அமைதியான சூழல், சுதந்திரமான செயற்பாடு என எமது தாயகத்தில் கிடைக்காத பல வசதிகள் வாய்ப்புக்களுடன் அவர்களது வாழ்க்கை சிறப்பாக இடம் பெற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும் திருமணம் முடிந்து மூன்று நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் மழலைச் செல்வம் கிடைக்காததால் தமக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்காமலே போய்விடுமோ என்ற கவலை எல்லோரையும் போல அவர்களுக்கும் ஏற்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் தமது குடும்ப வைத்தியரிடமும் பின்பு சிறப்பு வைத்தியரிடமும் காட்டி இது தொடர்பான பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். திருமதி சுதர்சினிக்கு சூலகத்தில் (obary) கட்டிகள் இருப்பதாகவும் கட்டிகளைக் கரைப்பதற்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமெனவும் வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்தனர். இதனால் அவர்கள் பிரம்ரன் நகரிலிருந்து தாம் சிகிச்சை பெறவேண்டிய ஸ்காபுறோ நகரத்திற்கு மிக நீண்ட தூரம் பிரயாணம் செய்துவந்து சிகிச்சை பெற்றுச் சென்று கொண்டிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தைச் செல்வம் கிடைப்பதற்காக மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நவீன சிகிச்சை முறைகள் மிகச் சிலருக்கே பயனளித்திருப்பது பற்றிய பேச்சுக்களும் இவர்கள் காதுகளுக்கு எட்டியது. அதேநேரம் இறைவழிபாட்டினை மேற்கொண்டு குழந்தைப் பாக்கியத்தைப் பெறுவதே சிறந்தவழி என்ற சிந்தனையும் ஆரம்பத்திலிருந்தே இவர்களது அடிமனதில் இருந்து வந்தது.

இவவாறு திரு. திருமதி சுரேந்திரன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பேறு தொடர்பாக குழப்பமும் கவலையும் அடைந்திருந்த காலகட்டத்தில்தான் கனடாவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருப்பது பற்றிய தகவல்கள் இவர்களுக்குத் தெரியவந்தது. அதுமட்டுமல்ல அங்கே சென்று நேர்த்தி வைத்து வழிபட்டதனால் குழந்தைப் பாக்கியம் கிடைத்த ஒரு அம்மையாரையும் இவர்கள் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த நிலையில் இவர்கள் ஸ்காபுரோ நகருக்கு அடிக்கடி வந்து சென்று கொண்டிருந்ததால் ஸ்காபுரோ நகரில் இருக்கின்ற கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை இவர்கள் தேடி முதலில் அது எங்கே இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொண்டனர்.

இதன் பின்பு பிரம்ரன் நகரிலிருந்து ஸ்காபுரோவிற்கு வந்து திரும்பிச் செல்கின்ற சந்தர்ப்பங்களில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும் வந்து வழிபட்டுச் செல்கின்ற வழக்கத்தை ஏற்படுத்தினர். ஆனால் ஸ்காபுரோ நகரில் பல்வேறு அலுவல்களையும் முடித்துக்கொண்டு மிகவும் காலதாமதமாகவே ஆலயத்திற்கு இவர்கள் வந்துசேர முடிந்தது. அது மட்டுமல்ல அவ்வாறு அவர்கள் வந்து சேருகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆலயத்தின் பூசைகள் யாவும் நிறைவடைந்திருக்கும் சூழ்நிலைகளே அங்கே காணப்பட்டன.

இவ்வாறு பூசை நிறைவடைந்திருந்தாலும் அவர்கள் வெளியில் நின்று கும்பிட்டு வந்தனர். அவ்வாறான சில சந்தர்ப்பங்களில் ஆலய வாசல்வரை பஞ்சாராத்தி தீபத்தை பிரதம பூசகர் கொண்டுவந்து அதனை அவர்கள் தொட்டுக் கும்பிடுவதற்கும் வழி செய்துள்ளார்கள். இவ்வாறு புதிதாக சந்நிதியானிடம் வந்து வழிபட்டுச் செல்கின்ற அந்தக் குடும்பத்தினருக்கு பொன் புவனேந்திரன் ஐயர் அவர்களும் திருநீறு மற்றும் பிரசாதங்களை வழமைபோல தாராளமாக வழங்கி அவர்களை நிறைவுடன் வழி அனுப்பி வைப்பதை வழமையாக்கிக் கொண்டார்கள். ஆனால் காலப்போக்கில் அவர்களுடன் நெருக்கமாக உரையாடுவதற்கு சந்தர்ப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த பொழுதுதான் அவர்கள் அங்கே தமக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கின்ற நோக்கத்திற்காகவே வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

இவ்வாறு திரு. சுரேந்திரன் திருமதி சுதர்சினி ஆகியோரின் தேவைகளையும் கவலையையும் பிரதம பூசகர் பொன் புவனேந்திரன் ஐயர் தெரிந்து கொண்ட நிலையில் அவர்கள் இருவருக்கும் நம்பிக்கை ஊட்டும் ஆறுதல் வார்த்தைகளையும் தனது ஆசிகளையும் வழங்கினார்கள். அத்துடன் சந்நிதியானுக்கு ஒரு நேர்த்தி வைத்து உங்கள் வேண்டுதலை அவனது திருப்பாதங்களில் சமர்ப்பித்து அவனை உள்ளம் உருகி வழிபடுமாறும் ஆற்றுப்படுத்தினார்கள். இப்பொழுது திரு. சுரேந்திரன் திருமதி சுரேந்திரன் சுதர்சினி இருவரும் சந்நிதியானுக்கு நேர்த்தி வைத்து தமது நேர்த்தியின் நிமித்தம் சந்நிதியானிடம் வந்து உள்ளம் உருகி வழிபடுகின்ற செயற்பாட்டினை ஒழுங்காகவும் உண்மையான விசுவாசத்துடனும் நிறைவேற்றி வந்தனர்.



சந்நிதியில் சுவாமிகள் பலவிதம் - கடந்த இருபது வருடங்களாக தனது உடலை இரும்புக் கம்பியினால் அடித்து வருத்தி அதனூடாக அடியவர்கள் பாவங்களைப் போக்குவதாகக் கூறும் கைதடிச் சுவாமிகள் - அருகில் நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் திரு சுரேந்திரன் அவர்கள் குழந்தைப் பேற்றினைப் பெறுவது தொடர்பான நேர்த்தி செயற்பாடுகளில் கூடிய அக்கறையும் நம்பிக்கையும் வைத்து சந்நிதியானை உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல அந்த நேர்த்தியில் அவர் வைத்த வேண்டுதலும் சராசரி அடியவர்கள் செய்கின்ற வேண்டுதலை விடப் பெரிதும் வேறுபட்டதாகவே அமைந்திருந்தது. ஆம்! தமக்கு ஒரு குழந்தை பிறந்தால் அது தாம் ஏற்கனவே வைத்தியரிடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற சிகிச்சையால் கிடைத்ததாகவே தாம் சிந்திக்க வேண்டிவரும். ஆகவே சந்நிதியான் திருவருளால்தான் தமக்கு குழந்தை பிறந்ததென்று தாம் முழுமையாக நம்பிக்கை கொள்வதற்கும் திருப்தி அடைவதற்கும் **குழந்தைச் செல்வம் கிடைப்பது மட்டுமல்ல அது இரட்டைக் குழந்தையாகப் பிறக்க வேண்டும்** எனவும் வேண்டுதல் செய்தார்.

தன்னை நோக்கித் தவம் இருப்பவர்களின் கடுமையான தவத்தினால் மகிழ்ந்து அவர்கள் என்ன வரம் கேட்டாலும் அவர்கள் கேட்கின்ற வரங்களை எல்லாம் எமது முழுமுதற் கடவுளான சிவபெருமான் வழங்குவார் என புராணங்கள் மூலம் நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால் இங்கே திரு. சுரேந்திரன் அவர்களோ காட்டிற்குச் சென்று உணவை ஒறுத்து, உடலை வருத்தி கடுமையான தவம் எதுவும் செய்யவில்லை. ஒரு சராசரி குடும்பத்தவரான சுரேந்திரன் சாதாரண நேர்த்தியை மட்டும் வைத்து சந்நிதியானை வழிபாடு செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் முருகப்பெருமானிடம் அவர் வேண்டுகின்ற வேண்டுதல்களோ தவம் செய்து வேண்டுதல்கள் செய்கின்றவர்கள் போல கடுமையானதாகவும் கண்டிப்பானதாகவும் அமைந்திருந்தது.

உண்மையில் திரு. சுரேந்திரனின் வேண்டுதல்கள் சராசரி மனிதர்கள் செய்கின்ற வேண்டுதல்களை விட மிகவும் வித்தியாசமானதாகவே அமைந்திருந்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தின் வழியிலான இல்வாழ்க்கை உண்மையான ஆழமான இறைநம்பிக்கை, தூய்மையான வழிபாடு என்பவை இருந்தால் நாம் எதனையும் இறைவனிடம் வேண்டுதல் செய்யலாம் என்பதனால் போலும் திரு. சுரேந்திரன் அவர்கள் இவ்வாறான வித்தியாசமான தனது வேண்டுதலை சந்நிதியானிடம் வேண்டி வழிபாடு செய்தார்கள்.

அவரது வேண்டுதல் நிறைவேறியதா? ஆம் நிறைவேறியது. அதுவும் குறுகிய காலத்தில் நிறைவேறியது. அவர்கள் நேர்த்தி வைத்து ஒரு சில மாதங்களுக்குள்ளேயே தமக்குக் குழந்தை கிடைக்கப் போவதை உணர்ந்து கொண்டனர். பின்பு அதனை உறுதிப்படுத்தியும் கொண்டனர். அது மட்டுமா? அவர்கள் சந்நிதியானிடம் வேண்டியது போல இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்ற அற்புதம் அங்கே அரங்கேறியது. அதை விடவும் அங்கே ஒரு குழந்தை ஆண் குழந்தையாகவும் இன்னொரு குழந்தை பெண் குழந்தையாகவும் கிடைத்ததனால் அது அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகவும் அமைந்திருந்தது. ஆம்! புராணங்களில் சிவபெருமான் கேட்கின்ற வரங்களை கேட்பவர்களுக்கு வழங்குவது போன்று இங்கே கலியுகக் கடவுளான சந்நிதியான் திரு. திருமதி சுரேந்திரன் தம்பதிகளுக்கு அவர்கள் வேண்டிய எல்லாவற்றையுமே வழங்கி அவர்களுக்கு நிறைவை ஏற்படுத்தி விட்டான்.

சிவன் வேறு முருகன் வேறு அல்ல. முழுமுதற்கடவுளான சிவபெருமான்தான் முருகப் பெருமானாக வடிவெடுத்து வந்துள்ளார் என்ற எமது சமயத்தின் அடிப்படையான உண்மையையும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் தெளிவாக உணர்ந்து கொள்வது சிறப்பானது. கந்தபுராணத்தில் கச்சியப்ப சுவாமிகள் சூரபத்மனுக்கு ஊடாக இதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றார். யுத்த களத்தில் சூரபத்மன் எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்தி எல்லா மாயங்களும் செய்து இறுதியாக எல்லாவற்றையும் இழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னந்தனியாக என்ன செய்வதென்று கலக்கமுற்று நின்றான். அப்பொழுது முருகப்பெருமான் அநந்தகோடி சூரியப்பிரகாசமான செவ்வொளி வீச தனது அடிமுடியற்ற அந்த விசுவரூபத்தை சூரபத்மனுக்குக் காண்பிக்கின்றார். அப்பொழுதுதான் சூரபத்மன் தேவர்களும் காண்பதற்கரிய அந்தக் காட்சியைக் கண்டு இவன் நான் எண்ணியது போன்ற ஒரு சிறுவன் அல்ல, தேவர்களுக்கும், இந்த அண்டங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக விளங்குகின்ற மூர்த்தியாகிய சிவபெருமான்தான் என்பதை உணர்ந்து கொள்ளுகின்றான். அதனை வெளிப்படுத்தும் **பக்திச் சுவை நிறைந்த அந்தக் கந்தபுராணப் பாடலை இங்கே தருகின்றோம்.**

கோலமா மஞ்சை தன்னிற்
குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட்
பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை
வானவர் தமக்கும் யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ

நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலியுகத்தில் சிவபெருமானை வேண்டி முற்காலத்தில் தவம் செய்தது போன்று நாமும் தவம் செய்துதான் ஈடேற்றம் பெறவேண்டுமென்பதில்லை. அப்படி நாம் இப்பொழுது செய்யவும் முடியாது. இல்வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டே பக்தி மார்க்கமான இறைவழிபாட்டை நாம் விரும்பிய ஆலயங்களுக்குச் சென்று அங்கே மேற்கொண்டு நாம் எம்மை ஈடேற்றிக் கொள்ள முடியும்.

பல யுகங்களுக்கு முற்பட்ட கால வரலாறுடைய மிகவும் அநாதியான எமது சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் தேவர்களது துன்பங்களைப் போக்கி அவர்களை சூரபத்மனின் கொடுமைகளிலிருந்து மீட்பதற்காகவே முருகப் பெருமானாகத் தோற்றம் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்றுதான் வெவ்வேறு தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு தெய்வங்களாக எமது முழுமுதற் கடவுளான சிவபெருமானே தோற்றம் பெற்றார் என எமது சமய நூல்கள் கூறுகின்றன. ஆகவே நாம் விரும்பிய ஆலயங்களுக்குச் சென்று விரும்பிய தெய்வங்களை வழிபட்டு எம்மை ஈடேற்றிக் கொள்ள முடியும். **இங்கே உண்மையான வழிபாடு தான் முக்கியமே தவிர எந்தத் தெய்வம் என்பது முக்கியமல்ல.** ரமன மகரிஷி மற்றும் எமது மண்ணில் வாழ்ந்த யோக சுவாமிகள் உட்பட ஞானிகள் யோகிகள் எல்லோரும் இவ்வாறே எமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளனர்.

சந்நிதியான் கலியுகக் கடவுள் மட்டுமல்ல, அடியவர்களை ஈடேற்றுவதற்காகவே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நாடிவந்து குடிகொண்ட அற்புதக் கந்தன். இதனால்தான் திரு. திருமதி சுரேந்திரன் தம்பதிகள் வேண்டியதுபோல 2009ஆம் ஆண்டு அவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்தது. அதுவும் இரட்டைக் குழந்தைகளாகக் கிடைத்தன. அதற்கு மேலாகவும் அவை ஆண் குழந்தையாகவும் பெண் குழந்தையாகவும் கிடைத்தன. இந்த நிலையில் அவர்களின் மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்லத்தான் முடியுமா? அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. சந்நிதியானது கருணையை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

சந்நிதியான் எவ்வாறு இவர்கள் வேண்டியதுபோல முழுமையாகவும் நிறைவாகவும் செல்வங்களை வழங்கினானோ அதேபோன்று இவர்களும் தமது முழுக் குடும்பத்தையும் சந்நிதியானுக்கு அடிமைகளாக்கி உள்ளனர். ஆண் குழந்தைக்கு கார்த்திக் எனவும் பெண் குழந்தைக்கு காவியா எனவும் கந்தக் கடவுளின் நாமங்களையே சூட்டியுள்ளனர். திரு. சிவபாதம் சுரேந்திரன் அவர்கள் குழந்தைகள் பிறந்ததன் பின்பு தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் தீர்த்தம் மட்டும் அருந்தி கந்தசஷ்டி விரதத்தை மேற்கொண்டு சென்ற வருடம்தான் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு செய்தார்கள். ஆலயத்தின் திருப்பணிகளுக்கு வேண்டிய பல உதவிகளையும் தாமாகவே மனமுவந்து வழங்கி உள்ளதையும் ஆலயத்தின் பிரதம பூசகர் அடியேனிடம் எடுத்துக் கூறினார்கள். 2009ஆம் ஆண்டு குழந்தை பிறந்தகாலம் தொடக்கம் இன்றுவரை ஒரு ஒழுங்குமுறையில் இவர்கள் ஒவ்வொரு வாரமும் சந்நிதியானிடம் வந்து வழிபட்டு செல்கின்றனர். அத்துடன் பூமாலை தொடுத்து சந்நிதியானுக்கு வழங்குதல் போன்ற தேவையான தொண்டுகளில் ஈடுபட்டு வருவதையும் நாம் ஆலயத்தில் காண முடிகிறது. இதேபோன்று திருமதி சுதர்சினி அவர்கள் வீட்டில் இருந்தவாறே கந்தபுராணம் முழுவதையும் பாராயணம் செய்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதையும் அடியேன் அவருடன் உரையாடும் பொழுது அறிய முடிந்தது. ஆம்! மொத்தத்தில் அவர்களது வாழ்க்கை என்ற கட்டிடத்திற்கு அத்திவாரமாக சந்நிதியானின் திருவருள் அமைந்து விட்டது.

திரு. சிவபாதம் சுரேந்திரன் இளமைக் காலம் தொட்டு தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை வழிபட்டு வருவதுடன் விரதங்களும் அனுஷ்டித்து சந்நிதியானது அடியவராக வாழ்ந்து வருகின்றார். இதேபோன்று திருமதி சுதர்சினி அவர்கள் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்தவராக இருந்ததினால் நல்லூரான் அடியவராக வாழ்ந்து வருவதுடன் பல்வேறு விரதங்களையும் மேற்கொண்டு வந்துள்ளார்.

ஆம்! ஈழத்தில் கந்தபுராணக் கலாச்சாரம் நிலவுகின்ற மண்ணில் பிறந்து கந்தபுராண கலாச்சார வாழ்க்கையை இவர்கள் வாழ்ந்து வந்தனர். தற்பொழுது சந்நிதியான் திருவிளையாடலால் புலம் பெயர்ந்து வாழ்கின்ற கனடா நாட்டிலும் எமது மண்ணின் மணம் மாறாத அதே கந்தபுராண கலாச்சார வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சந்நிதியானை வணங்குவோம்! அவனது வற்றாத திருவருளை எல்லோரும் பெற்று ஈடேற்றம் பெறுவோம்.

ஓம் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - மூன்று

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனை உள்ளம் உருகி வழிபட்ட மனநிறைவுடன் குலேந்திரசிகாமணி வீடு திரும்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். எப்பொழுதும் சித்தர்கள், ஞானிகள் நடமாடும் அந்த ஆலயத்தின் ஆலய வாசலின் வெளிவீதியில் அமர்ந்திருந்த அந்த சாமியார் குலேந்திரசிகாமணியை சைகையால் அழைத்து தனக்கு அருகில் அமரச் செய்தார். சாந்தமான முகத்துடன் எளிமையாகத் தோற்றமளித்த அந்த சாமியார் நீ ஆன்மீகத்தில் எதிர்காலத்தில் மேலும் உன்னை வளர்த்துக் கொள்ள இது உனக்குப் பயன்படும் எனக்கூறி அந்த மந்திரத்தை குலேந்திரசிகாமணிக்கு பக்குவமாக எடுத்துக் கூறினார்கள். அதுமட்டுமின்றி அந்த மந்திரத்தை எப்பொழுது ஓதவேண்டும், எவ்வாறு ஓதவேண்டும் என்பது போன்ற ஆலோசனைகளையும் ஆலயவாசலிலேயே குலேந்திரசிகாமணிக்குக் கூறி அவரை ஆற்றுப்படுத்தி விட்டார்கள்.


ஆம்! இந்த சம்பவம் நடைபெற்று இன்று முப்பது வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும் சந்நிதியானின் ஆலய வாசலில் தான் முன்பு எப்பொழுதும் சந்தித்திராத அந்த அருளாளர் அளித்த ஆசீர்வாதம் தான் இன்றுவரை நின்று நிலைத்து தன்னை ஆன்மீகப் பாதையில் ஆற்றுப்படுத்திக் கொண்டிருப்பதை குலேந்திரசிகாமணி பயபக்தியுடன் அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

வேலுச்சாமி குலேந்திரசிகாமணியின் சொந்த இடம் வல்வெட்டித்துறை. தற்பொழுது கனடாவில் மொன்றியல் நகரில் யோகா மாஸ்டர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்ற அதேநேரம் ஆழமான ஆன்மீகத் தேடலிலும் அவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். எமது மொழியின் சொத்தான திருக்குறளின் சிறப்பையும் எமது சமயத்தின் ஒரு பொக்கிஷமாகக் கருதப்படும் யோகாசனக் கலையையும் மொன்றியல் நகரில் எமது சமுதாயத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு கற்று பயன்பெற வேண்டுமென்ற தூர நோக்குடன் அவற்றை அங்கே திரு. குலேந்திரசிகாமணி மிகச் சிறப்பாகப் பரப்பிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமன்றி யோகாசனம், திருக்குறள் இரண்டையும் உள்ளடக்கியதான வருடாந்த விழாவினையும் வருடாவருடம் மொன்றியல் நகரில் நடாத்தி அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். 2015ஆம் ஆண்டுக்குரிய மேற்படி விழா ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி அங்கே நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.




**மொன்றியல் முருகன் ஆலயத்தின்**
**அழகிய முகப்புத் தோற்றம்**

05-05-2013 ஞாயிற்றுக்கிழமை நேரம் காலை பத்துமணி ஆகிக் கொண்டிருந்தது. அன்றும் திரு. வே. குலேந்திரசிகாமணி தனது மாணவர்களுக்கு யோகாசன வகுப்பு எடுப்பதற்காக மொன்றியல் நகரில் செறீஸ் வீதியிலுள்ள அந்த இடத்திற்கு செல்வதற்காக தனது வீட்டில் இருந்து காரில் புறப்படுகிறார். ஆனாலும் அவருடைய கார் யோகாசன வகுப்பு எடுப்பதற்காக அவர் செல்லவேண்டிய செறீஸ் வீதிக்குச் செல்வதற்குப் பதிலாக மொன்றியல் முருகன் ஆலயத்தைச் சென்றடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! இது அவருடைய வழமையான செயற்பாடு. யோகாசன வகுப்பு எடுப்பதற்கு முன்பு மொன்றியல் முருகன் ஆலயத்திற்குச் சென்று முருகப் பெருமானை உள்ளம் உருகி வழிபட்ட பின்புதான் அவர் யோகாசன வகுப்பிற்குச் செல்கின்ற வழக்கத்தை நீண்ட காலமாகக் கடைப்பிடித்து வருகின்றார். இவ்வாறுதான் அன்றும் மொன்றியல் முருகன் ஆலயத்தைச் சென்றடைந்த குலேந்திரசிகாமணி ஆலயத்தின் முன்பக்க வீதியில் தனது காரை நிறுத்திவிட்டு வழமைபோல் வெளிவீதியில் நின்றவாறே உள்ளம் உருகி முருகப் பெருமானை வழிபாடு செய்கின்றார்கள். கலியுகக் கடவுளான முருகப் பெருமானை வழிபட்ட நிலையில் அவரை அறியாமலே அவரது உள்ளத்தில் சாந்தியும் நிறைவும் ஏற்படுகிறது.



யோகா மாஸ்ரர் குலேந்திரசிகாமணி விழா மேடையில் திதிபாசனத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கும் காட்சி

உள்ளத்தில் ஏற்பட்ட அந்த ஆன்மீக நிறைவுடன் பெருமானே எல்லாவற்றிற்கும் நீயே துணை எனக் கூறியவாறு தனது கார் நிறுத்தப்பட்ட இடத்திற்குச் சென்று காரில் ஏறி தனது காரை இயக்க (ஸ்ராட்) முற்படுகின்றார். அப்பொழுது அங்கே இவரைப்போல ஆலய வழிபாட்டிற்காக வந்த இன்னொரு கார் இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைத் தாண்டி இவருக்குப் பின்பக்கமாக செல்வதை அவர் அங்கே காணுகின்றார். ஆம். அன்றையநாள் அவருக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்திய அந்த நிகழ்வு நடந்தேறுவதற்குக் காரணமாக அந்தக்கார் அமைந்துவிடும் என்பதை அவர் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. தனது காரில் ஏறி காரை இயக்கிய குலேந்திரசிகாமணி தனது காரை முன்னோக்கி எடுப்பதற்கு வசதியாக றிவேஸ்கியரில் மிகச் சிறிதளவு தூரம் பின்பக்கமாகக் காரைச் செலுத்துகின்றார். அப்பொழுது திடீரென இவருடைய காருக்குப் பின்பக்கத்தில் மிக அருகாமையிலிருந்து பலத்த கோன் சத்தம் கேட்கிறது. இதனை சற்றும் எதிர்பாராத குலேந்திரசிகாமணி உடனடியாகவே பிறேக்கை அமத்தி காரை நிறுத்துகின்றார்.

மிகுந்த பதட்டத்துடனும் கவலையுடனும் உடனடியாகவே காரில் இருந்து இறங்கி அங்கே என்ன நடந்தது என்று பார்வையிடுகின்றார். அங்கே இவர் தனது காரை இயக்கிக் கொண்டிருக்கும் பொழுது இவருடைய காரைத் தாண்டி பின்பக்கமாகச் சென்ற அந்தக் காரை ஓட்டிச் சென்றவர்கள் அதனை இவருடைய காருக்குப் பின்னால் மிக மிக அருகாமையில் கொண்டுவந்து கொண்டிருக்கும் பொழுது அதனைச் சரியாகக் கவனியாது குலேந்திரசிகாமணி தனது காரை பின்னுக்கு எடுத்ததன் விளைவே அந்த விபத்து என்பதை அப்பொழுது அவர் விளங்கிக் கொள்கிறார். உண்மையில் பிழை சரி பற்றி சரியாகத் தீர்மானிக்க முடியாத நிலையில் அங்கே ஒரு விபத்து நடந்தேறி விட்டது என்றே கூறலாம்.

இந்த நிலையில் பின்பக்கக் காருக்குள் இருந்த நடுத்தரவயதுடைய ஒரு அம்மையாருடைய குரலில் இருந்துவந்த பின்வரும் கூற்று குலேந்திரசிகாமணியின் இதயத்தை குற்றுவது போன்ற வேதனையை அவருக்கு ஏற்படுத்திவிட்டது.

**"குருடன் குருட்டுத் தனமாகக் காரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓட்டுகிறான்**" என்பது தான் அந்தக் கூற்று. ஆம் அந்த அம்மையார் அந்தக் கணத்திலேயே எந்தவித மனக் கிலேசமுமின்றி "குருடன் குருட்டுத்தனமாக காரை ஓட்டுகிறான்" என்று தனது உள்ளத்து உணர்வை வார்த்தைகளினூடாக வெளிப்படுத்தி விட்டார்கள். அந்த வாத்தைகள் குலேந்திரசிகாமணியின் காதுகளுக்கு எட்டியும் விட்டது. இதனால் எதையும் நிதானமாக அணுகுகின்ற சுபாவமுள்ள குலேந்திரசிகாமணியின் உள்ளத்தை மேற்படி வார்த்தைகள் நிலைதடுமாறச் செய்துவிட்டது. இந்த நிலையில் அவரது உள்ளத்திலிருந்தும் உதடுகளிலிருந்தும் அவரை அறியாமலே **முருகா! முருகா! முருகா!....** என்ற வார்த்தைகள் மட்டும்தான் வந்து கொண்டிருந்தது.

அங்கே விபத்துக்குள்ளான அந்தக்காரை நன்றாக உற்றுப் பார்த்ததில் சிறிய கீறல் விழுந்திருந்ததே தவிர வேறு பெரிதான பாதிப்பு எதுவும் அந்தக் காரில் இடம் பெற்றிருக்கவில்லை. அந்தக் காரில் இருந்த அம்மையாருடன் அவருடைய மகனும் அங்கே காணப்பட்டார். மகனே காரைச் செலுத்தி வந்துள்ளார் என்பதையும் அங்கே அவதானிக்க முடிந்தது. அதே நேரம் அந்த அம்மையார் தொடர்ந்தும் மிகுந்த கோபத்துடனேயே அங்கே காணப்பட்டாரென்பதையும் குலேந்திரசிகாமணி கவனிக்கத் தவறவில்லை. அந்தக் காரைத் தாம் வாடகைக்கு எடுத்து ஓடுவதாகவும் ஆகவே அவர்கள் அறவிடும் பெரும்தொகை நட்டத்தை குலேந்திரசிகாமணியே கட்டவேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். மேலும் அந்த அம்மையார் கைத்தொலைபேசியினூடாக தனது கணவரையும் உடனடியாகவே சம்பவ இடத்திற்கு அழைத்துவிட்டார்கள். தமது காரில் உற்றுப் பார்க்குமளவிற்கு இருந்த அந்தக் கீறலை தமது கைத் தொலைபேசி மூலம் அவர்கள் படமும் எடுத்துக் கொண்டார்கள். இப்பொழுது அவரது கணவரும் குலேந்திரசிகாமணியும் அந்த விபத்து தொடர்பாக தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் பற்றி தமக்கிடையே பேசிக்கொண்டிருந்தனர். மேலும் கார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்துவதற்கு ஏற்பட இருக்கும் செலவுப் பணத்தைக் கட்டுவதற்கு குலேந்திரசிகாமணி சம்மதம் தெரிவித்து உரிய படிவத்தில் கையொப்பம் வைக்கின்ற செயற்பாடும் அங்கே நடந்தேறியது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் எவருமே கற்பனைகூட செய்து பார்க்க முடியாத அந்த நிகழ்வு அங்கே அரங்கேறியது. அங்கே ஆலயத்திற்கு அருகாமையில் இருந்த ஓர் கடையில் ஏதோ ஒரு பொருளை வாங்க வேண்டிய தேவை அந்தக் குடும்பத்திற்கு அப்பொழுது இருந்துள்ளது. இதனால் அந்த அம்மையார் தனது கணவன் செலுத்தி வந்து அங்கே நிறுத்தியிருந்த அவர்களது இரண்டாவது காரில் கடைக்குச் சென்று அந்தப் பொருளை வாங்க முற்பட்ட பொழுதுதான் அந்த அதிர்ச்சி தரும் சம்பவம் அங்கே நடைபெற்றது. ஆம்! அந்த அம்மையார் தனது கணவன் செலுத்திவந்து அங்கே நிறுத்தியிருந்த தமது இரண்டாவது காரை ஸ்ராட் செய்து முன்னோக்கி ஓட்டிச் செல்வதற்கு வசதியாக அதனை சிறிது தூரம் றிவேசில் எடுக்க வேண்டியிருந்தது. இப்பொழுது அந்த அம்மையார் தமது காரை ஸ்ராட் செய்து றிவேசில் எடுக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! றிவேசில் சென்ற கார் பின்பக்கத்தில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் பலமாக முட்டி மோதுகின்ற துன்பியல் நிகழ்வு அங்கே அரங்கேறியது.


ஆம்! திரைப்படங்களில் நடந்தேறுவது போன்று எல்லா விடயங்களும் அங்கே தொடராக நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதல் விபத்து நடைபெற்று சரியாக ஐந்து நிமிட இடைவெளிக்குள்ளாகவே மீண்டும் ஒரு விபத்து அந்த மொன்றியல் முருகன் ஆலயத்திற்கு முன்பாக நிஜமாகவே நடந்தேறிவிட்டது. அதுமட்டுமல்ல அந்தக் காரின் பின்பக்க பம்பர் பலமாக நெளியுமளவுக்கு அந்த விபத்தின் பாதிப்பும் அங்கே காணப்பட்டது.

"குருடன் குருட்டுத்தனமாகக் காரை ஓட்டுகிறான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி அங்கே வழிபட வந்த அடியவர் உள்ளத்தில் பெரிய காயத்தை ஏற்படுத்திய அந்த அம்மையார் இப்பொழுது பட்டப்பகலில் நிரந்தரமாகக் காணப்பட்ட அந்த மின்சாரக் கம்பத்துடன் கண்மூடித்தனமாகத் தானே சென்று மோதி மீண்டும் ஒரு விபத்தை அங்கே ஏற்படுத்தி விட்டார். ஆம் குருடன் குருட்டுத்தனமாகக் காரை ஓட்டுகிறான் என்று சற்று முன்பு கூறிய அந்த அம்மையார் அந்தக் கூற்றினை தனக்குத் தானே உண்மையாக்கும் வகையில் தானே குருடியாகி விட்டது போன்ற கசப்பான நிகழ்வு ஒன்று ஐந்து நிமிட இடவெளிக்குள் அங்கே நடந்தேறி விட்டது.



யோகா பயிலும் மாணவி ஒருவர் வருடாந்த யோகாசன விழாவில் மேடையில் கடினமான ஆசனமொன்றை நிகழ்த்திக் கொண்டிருக்கும் காட்சி

சற்றும் எதிர்பாராத வகையில் அந்த அம்மையாருக்கு ஏற்பட்ட இவ்வாறான விபத்தினால் அங்கே எல்லோருமே ஒருகணம் அதிர்ந்து போனார்கள். மேலும் ஆலய வாசலில் நடந்தேறிவிட்ட இந்நிகழ்வினால் சம்பந்தப்பட்ட அந்த இரண்டு தரப்பினரும் வார்த்தைகளால் எந்தவித உணர்வுகளையும் வெளியில் வெளிப்படுத்த முடியாத ஒரு சூழலே அங்கே காணப்பட்டது. மாறாக தத்தமக்கு ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்து உணர்வுகளை தமக்குள்ளேயே மௌனமாக ஜீரணித்துக் கொண்டிருந்தனர்.

ஆம்! 05-05-2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10.15 மணியளவில் மொன்றியல் முருகன் ஆலயவாசலில் அந்த அம்மையாருக்கு நடைபெற்றதும் உண்மையில் ஒரு விபத்துத்தான். நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பது போல சராசரி அடியவர்களிடம் காணப்படுகின்ற அறியாமையை போக்குவதற்கான அல்லது அவர்களை மேலும் தன்னுடன் நெருக்கமாக்கிக் கொள்வதற்கான மொன்றியல் முருகனின் திருவிளையாடல்களாகவே இவற்றை நாம் கருத வேண்டும் என்பதை தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்த சம்பவம் நடைபெற்றதால் அந்த அம்மையார் இறைவனிடம் மேலும் ஒருபடி அண்மித்துச் சென்றுள்ளார் என்பதை எம்மால் நன்கு அறிய முடிகிறது.

இதேபோன்று வாழ்க்கையை தர்மநெறி சார்ந்ததாக வழிப்படுத்தி அதேநேரம் உண்மையான இறை சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் வே. குலேந்திரசிகாமணி போன்றவர்களுக்கு அருகாமையில் அல்ல, மிகவும் அருகாமையிலேயே எப்பொழுதும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையையும் நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ளவும் முடிகின்றது. மேலும் யோகாசன வகுப்பிற்கு செல்ல வேண்டிய அவசரத்தில் மொன்றியல் முருகனை ஆலயத்தின் வெளிவீதியில் மட்டும் நின்று வழிபட்டுச் செல்கின்ற குலேந்திரசிகாமணி இச்சம்பவத்திற்குப் பின்பு ஆலயத்திற்குள் சென்று உள்வீதி வலம்வந்து அவனது அற்புதத்தை மீட்டுப் பார்த்து உள்ளம் உருகி வழிபட்டபின்பே யோகாசன வகுப்பிற்கு சென்று வருகின்ற வழக்கத்தை இப்பொழுது மேற்கொண்டு வருகின்றார்.

மேலும் இச்சம்பவம் நிகழ்ந்து சிலமாதங்களுக்குப் பின்பு குலேந்திர சிகாமணி எதிர்பாராத விதமாக அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரை அவர்களது வியாபார ஸ்தலத்தில் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அந்த அம்மையார் திரு. குலேந்திரசிகாமணியிடமிருந்து நஷ்டஈடு பெறுவது தொடர்பாக தாம் முன்பு முடிவு செய்தது போன்ற முன்னெடுப்பு எதையும் தொடர விரும்பவில்லை என்பதை பௌவியமாக குலேந்திரசிகாமணியிடம் எடுத்துக் கூறியிருந்ததும் நாம் மனம் கொள்ளத் தக்கது.

தூய்மையான சிந்தனையுடன் ஸ்தாபிக்கப்பட்ட மொன்றியல் முருகன் ஆலயத்திற்கு அடியவர்கள் உண்மையான பக்தியுடன் சென்று வழிபட்டு வருவதை நாம் காணமுடிகிறது. இவ்வாறு தூய்மையான சிந்தனை, உண்மையான வழிபாடு என்பன இடம்பெறும் பொழுது அங்கே அற்புதங்கள் இயல்பாகவே நடைபெறும் என்ற ரமண மகரிஷியின் கூற்றுக்கு இணங்க இந்த ஆலயத்திலும் இதுபோன்ற அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. நித்திய பூசைகள், அபிஷேகங்கள், வருடாந்த உற்சவங்கள் என்பன அங்கே சிறப்பாக இடம்பெற்றுவரும் அதேவேளை முருகப் பெருமானுடைய திருவருள் வேண்டி 07-06-2015 ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்தில் மிகப்பெரியளவில் ஒரு யாகம் நடாத்தப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆம்! சராசரி அடியவர்களாக மொன்றியல் முருகன் ஆலயத்திற்கு சென்று வந்த அந்த அம்மையாரும், குலேந்திரசிகாமணியும் கந்தப் பெருமான் நிகழ்த்திய திருவிளையாடலினால் தற்பொழுது ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டவர்களாகவும் மேலும் ஆழமான இறைநம்பிக்கை உள்ளவர்களாகவும் இறைபக்தி உள்ளவர்களாகவும் ஆலயத்திற்கு சென்று வருகின்றனர்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் நான்கு

ஈழத்தில் கதிர்காமத்தைப் போல தொண்டைமனாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயமும் புராதனகால வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் ஆலயமாகும். அதுமட்டுமல்ல மருதர் கதிர்காமர் சந்நிதி முருகனால் ஆட்கொள்ளப்பட்டதும் அவரையே தனக்குப்பூசை செய்யுமாறு அருட்கட்டளையிட்டதும் சந்நிதி ஆலயத்தில் 19 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வாகவுள்ளது. இவ்வாறு மருதர் கதிர்காமரால் முருகப் பெருமானுக்கு 1840இல் பூசை ஆரம்பிக்கப்பட்டதாகக் கருதப்படும் அக்காலப்பகுதியில் இருந்து மருதர் கதிர்காமரின் சந்ததியினரே இன்றும் பூசகர்களாக கடமை புரிந்து வருகின்றனர்.

மருதர் கதிர்காமர் மட்டுமன்றி அவர் சந்ததியில் தோன்றி தற்பொழுது பூசை செய்து கொண்டிருக்கின்ற பூசகர்கள் கூடச் சந்நிதியானின் அருட்கட்டளைகள், காட்சிகள் என்பவற்றிற்கு உட்பட்டு ஆலயத்திற்காகவே தங்களை அர்ப்பணித்து பூசையை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பிரதம பூசகராக செயற்பட்டுக்கொண்டிருக்கும் பொன் புவனேந்திரன் ஐயரும் மருதர் கதிர்காமர் மரபில் வந்த பூசகரே. அதுமட்டுமல்ல கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட வரலாறும் சந்நிதியான் நிகழ்த்திய ஒரு திருவிளையாடலே என்பதனை சந்நிதியான் அற்புதங்கள் பாகம் நான்கில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளோம்.

சிலர் பிறக்கும் பொழுதே சந்நிதியானுக்கு பூசை செய்து பணிபுரிய வேண்டும் என்ற வகையில் அற்புதமான நிகழ்வுகளுடன் பிறந்து தற்பொழுது பூசை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு அற்புதமான காட்சிகளுடனும், அங்க அடையாளங்களுடனும் பிறந்து பூசை மேற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்தான் சின்ன ஆறுமுகசாமிஐயர் என எல்லோராலும் அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை ஆறுமுகசாமிஐயர் ஆவார். 85 வயதைத் தாண்டிய மூத்தபூசகராக இவர் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.



பெரிய ஆறுமுக சுவாமி ஐயர்

சின்ன ஆறுமுகசாமி ஐயர் பிறக்கின்ற பொழுதே சந்நிதியானின் பூசகராகத் தொண்டாற்ற வேண்டியவர் என்பதற்குரிய காட்சிகளும், அடையாளங்களும் மிகவும் துள்ளியமாக சந்நிதியானால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சின்ன ஆறுமகசாமிஐயரின் தாயாரின் பெயர் திருமதி க.வள்ளிப்பிள்ளை ஆவார். இவர் சின்ன ஆறுமுகசாமிஐயரை வயிற்றில் வைத்திருந்த பொழுது பிரசவ வேதனையால் மிகவும் துன்பப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி பிரசவ வேதனையால் துடித்த பொழுது சந்நிதி முருகனது நாமங்களையே வாயில் உச்சரித்து அதன் மூலம் தனது வேதனையை போக்க முயற்சித்துள்ளார். சிறிது நேரத்தில் வேதனை குறைவடைய அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அப்பொழுது வாயில் பெரிய சுருட்டை பற்ற வைத்தபடி திறந்த காரில் ஒரு வைத்தியர் வந்து இறங்கினார். அவர் திருமதி வள்ளிப்பிள்ளை அவர்களின் வேதனைக்கு வேண்டிய சிகிச்சையை அளித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையை குறைப்பதற்கு மருந்து கொடுத்து விட்டு பின்வருமாறு கூறினார்.

"என்னுடைய வாட்டில் பலவகையான வருத்தக்காரரும் தங்கியிருக்கினம் இவர்களையெல்லாம் அங்கே தவிக்கவிட்டு நான் இங்கே அடிக்கடி வந்து பார்க்க முடியாது. காசு கட்டிக் கூப்பிட்டபடியால் நான் வந்தனான். நான் தந்த மருந்துக்கு உடனே மூன்றில் ஒரு பங்கு வருத்தம் மாறும் மிகுதி படிப்படியாக குறைந்து விடும் எனக்கூறி விட்டு யார் வந்து வைத்தியம் பார்த்தது என்று எவரும் கேட்டால் பெரிய மானிப்பாய் வைத்தியர் தம்பித்துரைசாமி வந்தவர் என்று கூறுங்கோ எனச் சொல்லி விட்டு மீண்டும் சுருட்டை வாயில் வைத்தபடி காரில் ஏறிச் சென்றுவிட்டார்."

ஆம்! திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களுக்கு சந்நிதியான் கனவிலே காட்சி தந்து இவ்வாறு தனது திருவிளையாடல்களை அங்கே காண்பித்துள்ளான்.

சாதாரண வைத்தியசாலைகளைவிட மகப்பேற்று விடயங்களுக்கு மானிப்பாய் வைத்தியசாலை அரைநூற்றாண்டுக்கும் முற்பட்ட அக்காலத்தில் சிறந்ததாக கருதப்பட்டது. இங்கே பெரிய மானிப்பாய என்று குறிப்பிட்டதன் மூலம் எல்லாவற்றையும் விடப்பெரிய ஆஸ்பத்திரியாக அல்லது இறுதி ஆஸ்பத்திரியாக கருதப்படும் சந்நிதி ஆலயம்தான் தனது இருப்பிடம் என்பதையும், அங்கே இருந்தே தான் வந்திருப்பது பற்றியும் சந்நிதியான் திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளைக்கு தெரியப்படுத்தியுள்ளான்.

இவ்வாறு சந்நிதியான் காட்சி கொடுத்து அருள் வாக்குகள் கொடுத்தபடி திருமதி வள்ளிப்பிள்ளையின் அசாதாரண வேதனை குணமடைந்து சாதாரணமாக மகப்பேற்றை எதிர்நோக்கும் ஒரு பெண் என்ற நிலையில் அவர் காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதம்பித்துரைசாமி என்ற பெயருடன் சந்நிதியான் காட்சி கொடுத்துச்சென்று ஏறத்தாழ பத்து நாட்களின் பின் திருமதி க.வள்ளிப்பிள்ளை அவர்களுக்குப் பிரசவவேதனை தோன்றியது. தொண்டமானாற்றின் அயல் கிராமமான கெருடாவிலைச் சேர்ந்த மருத்துவமாது ஒருவரை அழைத்துக் குழந்தைப் பேற்றுக்கான முன் ஆயத்தங்களில் ஈடுபட்டனர்.

அந்தச்சந்தர்ப்பத்தில் அங்கே இன்னொரு அற்புதம் அரங்கேறிக் கொண்டிருந்தது. ஆம்! தற்பொழுது பிரதம பூசகர்களில் ஒருவராகக் கடமையாற்றும் சிவசண்முகஐயர் அவர்களின் தந்தையான க. ஆறுமுகசாமிஐயர் மூலம் இந்த அற்புதம் இடம்பெற்றது. பெரிய ஆறுமுகசுவாமி ஐயர் பிரசவத்தை எதிர்நோக்கியிருக்கும் திருமதி வள்ளிப்பிள்ளை அவர்களின் கணவராண திரு சு. கணபதிப்பிள்ளை அவர்களிடம் வந்து பிறக்கப்போகும் குழந்தை பற்றிய தரிசனங்கள் தனக்கு கனவிலே தென்பட்டதென்றும் அக்குழந்தை ஆண்மகவாகவும், ஆறுமுகக் கடவுளுக்குரிய சில அடையாளங்களுடன் பிறக்கும் எனவும் அக்குழந்தைக்கு ஆறுமுகசாமி என்றே பெயரை வைக்குமாறும் குழந்தை பிறப்பதற்கு முன்பே கூறிச்சென்றார். இவ்வாறு ஆறுமுகசாமிஐயர் கூறிச்சென்ற இரண்டாம் நாள் திருமதி க.வள்ளிப்பிள்ளை அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. திரு சு.கணபதிப்பிள்ளை அவர்கள் மருத்துவிச்சியின் மூலம் ஆண் குழந்தை பிறந்துள்ளதை உறுதிப்படுத்தியவுடன் அக்குழந்தையில் ஏதாவது விஷேட அடையாளங்கள் இருக்கின்றனவா எனவும் விசாரித்தார்.

அதற்கு மருத்துவிச்சி அவ்வாறான அடையாளங்கள் எதுவும் தனக்குத் தெரியவில்லை எனப் பதிலளித்தார். ஆனால் திரு சு. கணபதிப்பிள்ளை அவர்கள் மருத்துவமாதுவிடம் திரும்பவும் குழந்தையில் அங்க அடையாளங்கள் இருக்கின்றனவா என்பதை கவணமாகப் பார்வையிட்டு கூறுமாறு கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது மருத்துவமாது கூர்மையாகக் குழந்தையின் உறுப்புக்களைக் கவனித்த பொழுது பிறந்த குழந்தையின் **இரண்டு பெருவிரல்களிலும் மேலும் மும்மூன்று சிறிய விரல்களாக மேலதிகமாக ஆறு விரல்கள் இருப்பதை அப்பெண் அவதானித்தார்.**



கணபதிப்பிள்ளை ஆறுமுக சுவாமி ஐயர்
(சின்ன ஆறுமுக சுவாமிஐயர்)

ஆம்! சந்நிதியானுடைய அருளிற்கு பாத்திரமானவரும் எல்லோராலும் மதிக்கப்படுபவருமான பெரிய ஆறுமுகசாமிஐயருக்குச் சந்நிதியான் கனவிலே காண்பித்த தரிசனம் நிஜமானது. அதாவது குழந்தை ஆண்மகவாகவும், அத்துடன் மனிதர்களுக்கு இருக்கின்ற பத்து விரல்களை விட மேலதிகமாக ஆறு விரல்கள் கொண்ட குழந்தையாகவும் அது காட்சியளித்தது.

பெற்றோர்கள் பிறந்த குழந்தை சந்நிதியானுக்குத் தொண்டு செய்வதற்காகவே பிறந்துள்ளது என்பதை அப்பொழுதே உணர்ந்து கொண்டனர். அதுமட்டுமன்றிக் குழந்தைக்கு ஆறுமுகசாமி என்றே பெயரையும் சூட்டினார்கள்.

அவர்தான் இன்று சின்ன ஆறுமுகசாமிஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கப்படுகின்றார். தற்பொழுதும் நுணுக்கமாக அவதானித்தால் அந்த ஆறு விரல்களையும் நாம் காணமுடியும். ஏற்கனவே இருந்த பெரிய ஆறுமுகசாமி ஐயருக்குக் கனவிலே தரிசனம் கிடைத்து இக் குழந்தை பிறந்ததினாலும் தரிசனத்தில் குறிப்பிட்டதற்கிணங்கவும் சின்ன ஆறுமுகசாமிஐயர் என்றே இவர் எல்லோராலும் இன்றும் அழைக்கப்படுகின்றார்.

வருடாந்த உற்சவகாலங்களில் சந்நிதியானுக்கு மிகவும் அழகாகவும் அற்புதமாகவும் சாத்துப் படிகள் செய்வதில் அவருக்கு நிகர் அவரே என்று கூறுமளவுக்கு சின்னஆறுமுகசுவாமிஐயரின் அலங்கார செயற்பாடுகள் அமைந்திருக்கும் அதுவும் இயற்கையான மலர்களால் மேற்கொள்ளப்படும் இந்த சாத்துப்படிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும். இவ்வாறு அவர் மட்டுமல்ல அவரின் குடும்பமே சந்நிதியானிடம் அளவில்லாத பக்தி கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஒரு மூத்த பூசகராகவும் தனித்துவமான அம்சங்கள் கொண்டவராகவும் விளங்கும் சின்ன ஆறுமுகசாமிஐயர் அவர்கள் சந்நிதியானுடைய பல்வேறு திருவிளையாடல்களைத் தன் வாழ்க்கையில் அனுபவித்து, அகமகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நல்லவை தீயவை எல்லாம் அவன் வழிப்படியே நடக்கும் அவற்றை எவரும் மாற்ற முடியாது என்பதை தனது நீண்ட கால வாழ்வியல் அனுபவத்தால் உணர்ந்து தனது வாழ்க்கைப் பயணத்தை ஓட்டிச்செல்கின்ற ஒரு பெருமகனாக ஆறுமுகசாமிஐயர் விளங்குகின்றார்.

இந்த ஆழமான உண்மையை, பொருள் பொதிந்த தத்துவத்தை யோக சுவாமிகள் எப்பவோ முடிந்த காரியம் என்ற தனது அருள் வாக்கியத்தால் இரத்தினச் சுருக்கமாக எமக்கெல்லாம் கூறிச்சென்றுள்ளார்.

ஓம்முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஐந்து

இற்றைக்கு 60 வருடங்களுக்கு முன்பு ஆறுமுகம் பரியாரியாரின் மகன் விசாகரத்தினம் டொக்டர் தனது பரம்பரைத் தொழிலான வைத்தியத் தொழிலை தொண்டைமானாற்றுச் சந்தியில் தெற்குப் புறமாக உள்ள கட்டிடத்தில் (இன்று இடிந்த நிலையில் உள்ளது) மேற்கொண்டுவந்தார். தற்பொழுது லண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த அவர் கடந்த வருடம் அமரத்துவமடைந்துள்ளார்கள். இவர் தந்தையின் வழியில் வைத்தியத் தொழிலை மேற்கொண்டு வந்த காலத்தில் மக்களால் மதிக்கப்படும் ஒருவராக மட்டுமன்றி பல்வேறு ஆற்றல்கள் நிறைந்த ஒருவராகவும் விளங்கினார். சமூக சேவை, சமூகச் சீர்திருத்தம், நாடகம், அரசியல் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு உள்ளவராகவும் காணப்பட்டார்.

நாடகத்தில் நடிக்கின்ற பொழுது விகடமாகப் பேசி மக்கள் மனதில் இடம்பிடித்த ஒருவராக காணப்பட்டார். ஒருமுறை வைத்தியராக நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்த பொழுது பின்வரும் வரிகளில் விகடமாகப் பாடி தனது பாத்திரத்தை வழமை போல நிறைவுடையதாக்கினார் என அவரது நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

தலையிடி காய்ச்சல் வந்தால்
தயவுடன் மருந்தைக் கேளும்
மலை தனில் இருக்கும் கல்லை
வண்டில் கொண்டு ஏற்றி வந்து
தலை தனை கீழே வைத்து
கல் அதை மேலே போட்டால்
தலையிடி காய்ச்சல் எல்லாம்
தவிடு பொடி ஆகும் தானே

அரசியற்துறையிலும் இவர் முற்போக்கான வராகவும் தமிழ் நாட்டில் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்று வந்த தி.மு.க.கட்சியின் கொள்கைகள், அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா போன்றவர்களின் பாங்கில் பேசுகின்ற தன்மைகள் போன்றவற்றை இங்கேயும் மேற்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டார். மேடைகளில் பேசுகின்ற பொழுது பின்வருமாறு அவர் கூறுவதுண்டு.

நாங்கள் வெல்வதற்காக வரவில்லை
சொல்வதற்காக வந்துள்ளோம்

இதே போன்று தாழ்த்தப்பட்டோரின் ஆலய பிரவேசம் போன்ற செயற்பாடுகளிலும் பங்களிப்புச் செய்து வந்தார். அத்துடன் புராதன ஏட்டுச் சுவடிகளை பேணுதல் பரம்பரை வைத்திய முறைகளின் சிறப்பை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தல் போன்ற செயற்பாடுகளையும் செய்து வந்தார்.

அக்காலகட்டத்தில் தமிழ் மக்கள் அரசாங்க உத்தியோகம் என்ற வகையில் ஏனைய தொழில்களைப் போன்று முப்படைகளிலும் சேர்ந்து தமது தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டிருந்தனர். இந்த வகையில் விசாகரத்தினம் டொக்டரும் தனது மகனைக் கடற்படைக்கு சேர்ப்பதற்காக விண்ணப்பித்து அதில் அவர் தெரிவு செய்யப்பட்டதனால் அதற்கான பயிற்சி அவருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அக்காலத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் கடற்படையினர் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்ததினால் காங்கேசந்துறைப் பகுதியிலேயே இவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

இவ்வாறான கடற்படைப் பயிற்சியின் பொழுது விசாகரத்தினத்தின் மகன் காணாமல் போனது பற்றிய தகவல் வீட்டிற்கு கிடைத்தது. காணமல் போனவரை கண்டுபிடிப்பதற்காக கடற்படையினர் மட்டுமன்றி விமானப்படை மற்றும் தரைப்படையினர் எல்லோரும் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனாலும் கூட அவர்களின் முயற்சி பயனளிக்கவில்லை.

தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெற்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியில் ஈடுபட்டவர் கிடைப்பார் என்ற நம்பிக்கை சகலருக்கும் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. இறுதியாக தேடும் முயற்சி படிப்படியாக கைவிடப்பட்டு அவர் இறந்திருக்க வேண்டுமென்பது உறுதியாகி விட்டது.

இந்த நிலையில் விசாகரத்தினம் டொக்டரின் உடலும் உள்ளமும் பதட்டமடைய ஆரம்பித்தது. தனது மகனின் இழப்பைத் தாங்கமுடியாதவரான அவர் பைத்தியம் பிடித்தவர் போல வீட்டிலிருந்து ஓட ஆரம்பித்தார். அவர் எங்கே ஓடுகின்றார் என்பது எவருக்கும் விளங்கவில்லை. அவரைப்பின் தொடர்ந்து அவரது மனைவியும் ஓடலானார். இவ்வாறு ஓடி வந்த விசாகரத்தினம் டொக்டர் சந்நிதியானின் வாசலை வந்தடைந்தார். சந்நிதியான் வாசற் பக்கமே எட்டிப்பாராதவர் அங்கே வடக்குத்தெற்காக அஷ்டாங்கமாக விழுந்து உடலும் உள்ளமும் நடுங்கியபடி வாய்விட்டு கதறி அழ ஆரம்பித்தார்கள். தனது மகனைக் காப்பாற்றும்படி கண்ணீர் மல்க சந்நிதியானிடம் வேண்டுதல் செய்தார்.

இதேவேளை மடைப்பள்ளியில் அமுது செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆலயப்பூசகர்கள் அவர் விழுந்து கதறி அழுகின்ற சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து நடக்கின்ற சம்பவத்தை வியப்புடன் நோக்கினார்கள்.

ஆம்! ஆலயப்பகுதியில் காணப்படாத ஒருவர் கோயிலுக்குப் போகாத கொம்யூனிஸ்டுக்கள் என்று அழைக்கப்படுபவர்களில் ஒருவராக உள்ள விசாகரத்தினம் டொக்டர் அங்கே அழுதவாறு சந்நிதியானது நாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். அவரின் பரிதாபமான நிலை உண்மையில் அந்த பூசகர்களின் உள்ளத்தைத் தொடுகின்ற காட்சியாகவே இருந்தது.

பூசகர்கள் மட்டுமன்றி ஊரவர்கள் கூட விசாகரத்தினம் டொக்டருடைய நிலமைக்காகப் பரிதாபப்பட்டனர். அவரது மகன் காணாமற் போனதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் பரிதாபப்பட்டாலும் சிலர் பின்வருமாறு கூறிக்கொண்டார்கள். **“இறைவன் ஒருவன் இருப்பதையே ஏற்றுக்கொள்ளாத டொக்டர் தனக்குத் துன்பம் வந்தவுடன் ஆலயத்தை நாடி வந்துள்ளார். இவர்களை சந்நிதியான் எவ்வாறு ஏற்றுக்கொள்வான். சரி அவரை ஏற்றுக்கொண்டாலும் காணாமல் போன அவரது மகன் கிடைத்துவிடவா போகின்றான்”** இவ்வாறு மகன் காணாமல் போன துயரம் ஒருபுறம் மற்றவர்களுடைய அவச்சொற்கள் மறுபுறமுமாக விசாகரத்தினம் டொக்டர் வேதனைத்தீயினுள் சிக்கித்தவித்தார்கள்.



**டாக்டர் விசாகரத்தினம்**

ஆனாலும் விசாகரத்தினம் டொக்டர் சந்நிதியானின் திருப்பாதங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டார்கள். தனக்கு இவ்வாறான பரிதாபமான நிலை ஏற்பட்ட நிலையில் கருணைக்கடலான நீ இரங்க மாட்டாயா? எனது துன்பத்தை போக்கமாட்டாயா? என சந்நிதி வேலவனிடம் சரணாகதி அடைந்தார்கள். இவ்வாறு தனது மகனை மீட்டுத் தருமாறு சந்நிதியானுடைய நாமங்களை இடைவிடாது உச்சரிக்கலானார். தனது அறியாமையை மன்னித்து அருளுமாறு கண்ணீர் சிந்தினார்கள்.

ஆம்! விசாகரத்தினம் டொக்டரின் வேண்டுதல் சந்நிதியானின் உள்ளத்தைத் தொட்டது. கருணைக்கடலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானின் கடைக்கண்பார்வை இவரின் மேல் திரும்பியது. காணாமல் போய் மயக்கநிலையில் கரையில் ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடந்த அவரது மகன் தற்பொழுது கடற்படையினரின் கண்களுக்குத் தென்பட்டார். அவர் உயிர் பிழைத்த செய்தி வீட்டைநாடி வந்தது.

கலியுகக்கந்தனான சந்நிதிவேலவனின் கருணையின் ஆழத்தை அளவிடமுடியாத விசாகரத்தினம் அவர்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றவராய் தனது உணர்வலைகளை எவ்வாறு வெளிக்காட்டுவது எனத் தெரியாது தத்தளித்தார்.

இறுதியில் தனக்குள் முடிவு எடுத்தவராய் நடந்து முடிந்த அற்புத நிகழ்வை பெரிய அளவில் அச்சிட்டு தொண்டைமானாற்று சந்தியில் வைத்து அந்தப் பாதையால் சென்று வருகின்ற வாகனங்களில் உள்ளவர்கள் உட்பட அனைவருக்கும் விநியோகித்தார்கள். இன்று அடியேன் செயற்படுவது போன்று சந்நிதியான் நிகழ்த்திய அற்புத நிகழ்வை அடியார்களுக்கு வெளிப்படுத்தும் அந்த செயற்பாட்டை அன்றே செய்ய முற்பட்டுள்ளார். அவர் அச்சிட்ட பிரசுரத்தில் பின்வரும் வரிகள் பெரிதாக அச்சிடப்பட்டிருந்தன.

**அரசாங்கத்தின் கடற்படை, தரைப்படை, விமானப்படை என்பவை தேடிக்கண்டுபிடிக்க முடியாத எனது மகனை சந்நிதி வேலவனின் வேற்படைதான் இறுதியில் கண்டபிடித்தது.**

ஆம்! வேலாயுத வடிவில் மூலஸ்தானத்தில் வீற்றிருந்து தன்னை நாடிவருகின்ற அடியார்களை அரவணைத்து அவர்களது துன்பத்தைப் போக்குகின்ற சந்நிதி வேலனது அருளிற்கு எல்லைதான் உண்டோ? அல்லது அதனை அளவிடத்தான் எம்மால் முடியுமா?

ஓம்முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆறு

மக்கள் நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கான வாய்ப்புக்களும், சந்தர்ப்பங்களும் எமது சமயச்செயற்பாடுகளில் நிறைவாகவே காணப்படுகின்றன.

காலை நேரத்தில் அமைதியான சூழலில் ஆலயத்தில் அடிக்கப்படுகின்ற மணி ஓசை அப்பகுதியின் அனைத்துமக்களின் உள்ளங்களையும் இறைவன் பால் ஈர்த்து அவர்களின் உதடுகளை இறை நாமங்களை உச்சரிக்கச் செய்வதாகவும் அமைந்திருக்கிறது.

இவ்வாறு உள்ளமும், உதடும் இறை நாமங்களை உச்சரித்தவாறு ஆரம்பிக்கின்ற அன்றைய பொழுது மக்களுக்கு மனதில் அமைதியையும், அதே நேரம் ஆற்றுகின்ற கருமங்கள் அனைத்தும் நன்மையாக முடியுமென்ற நம்பிக்கையையும் அவர்களுக்கு ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

நாம் இங்கே குறிப்பிடுவதிலும் பார்க்க மேலும் ஒரு படி உயர்வான சிறப்புக்களை சந்நிதியானுடைய மணி ஓசை மக்களுக்கு ஏற்படுத்தியது என்பதை 1950 ஆம் ஆண்டை தொடர்ந்து வந்த காலப்பகுதியில் வாழ்ந்து அதை அனுபவித்த அன்பர்கள் நன்கு உணர்வார்கள்.

சந்நிதியானுடைய அந்த மணிஓசை தனித்துவ மானது. எவருடைய உள்ளத்தையும் இலகுவாகத் தொடக்கூடியது. டா..ங் டா..ங் டா..ங் என்று அது ஒலிக்கும் ஓசையும் அந்த ஓசை வியாபித்துச் செல்லும் தூரமும் அதன் தனித்துவத்தை எவரும் மிக இலகுவாக உணர்ந்து கொள்ள உதவும் அம்சங்களாகும்.

சந்நிதியானை குல தெய்வமாக வணங்குகின்ற அடியார்கள், அவனது நாமங்களை தினமும் உச்சரித்து அவனது அருளை நாடும் அடியார்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானுடைய மணி ஓசையை கேட்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் சந்நிதியானை நேரில் சென்று தரிசித்தது போன்ற உணர்வை வெளிப்படுத்தியதை அனைவரும் அறிவர்.



ஆலயத்தின் முன்னைய முகப்புத் தோற்றமும்
வானுயர்ந்த மணிக்கூட்டுக் கோபுரமும்

1986ஆம் ஆண்டு ஏப்ரல் 8ம் திகதி இராணுவத்தின் எறிகணை வீச்சினால் சந்நிதியானுடைய இந்த காண்டாமணி முற்றாக சிதைவடைந்து அந்த அருள் ஓசையை மக்கள் கேட்க முடியாத நிலமை ஏற்பட்ட சம்பவம் வேதனையான விடயம் மட்டுமல்ல ஆலயத்தின் பொலிவினையே ஒரு படி குறைத்து விட்டது போன்ற உணர்வை எல்லோருக்கும் ஏற்படுத்தியது. ஆனாலும் நீண்ட காலத்தில் அதாவது 2002ஆம் ஆண்டு பெருந்தொகைப் பணத்தில் புதிய காண்டாமணி உருவாக்கப்பட்டுள்ளது. ஆம்! இது ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது காண்டாமணியாகும். இதனுடைய உருவாக்கத்திற்கு வேண்டிய ஒழுங்குகளையும், பணத்தையும் இங்கிலாந்து, கனடா போன்ற வெளிநாடுகளில் வசிக்கும் தொண்டமானாற்றைச் சேர்ந்த அன்பர்களும் ஏனைய முருகனடியார்களும் ஒன்றிணைந்து ஒப்பேற்றியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய திருப்பணிச் செயற்பாடுகள் உண்மையில் போற்றப்படவேண்டியதாகும்.



1986ம் ஆண்டு சிதைக்கப்பட்ட காண்டாமணியும் கோபுரமும்

ஆனாலும் ஈழத்தில் எங்கும் இல்லாத புனிதமும் சிறப்பும் வாய்ந்த சந்நிதியானது முதலாவது காண்டாமணி ஆரம்பத்தில் சந்நிதி ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்ட வரலாறு கூட சந்நிதியானுடைய திருவிளையாடல்தான் என்பது பலர் அறியாத விடயமாகும். சந்நிதியானுடைய காண்டாமணி சந்நிதி ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்ட சம்பவம் சந்நிதியானுடைய திருவிளையாடலின் ஓர் அம்சம் மட்டுமல்ல மனித வாழ்க்கையின் யதார்த்தத்தைப்புரிந்து கொள்ளாத அன்பர்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு வாழ்க்கைப் பாடமும் கூட எனக் கூறலாம்.

வாழ்க்கை என்பது எல்லோருக்கும் இன்பமாக இருப்பதும் இல்லை எல்லோருக்கும் துன்பமாக இருப்பதுமில்லை அதே போல செல்வம் உள்ளவர்கள் எப்பொழுதும் எல்லா விடயத்திலும் சந்தோசமாக இருப்பவர்கள் என்பதும் இல்லை. வறுமையில் வாழ்பவர்கள் எப்பொழுதும் எல்லா விடயங்களிலிலும் கவலையில் மூழ்கியிருப்பார்கள் என்பதுமில்லை. வாழ்க்கையின் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தத்தை புரிந்து கொள்வதன் மூலம் நிலை தடுமாறாது நிதானமாக எமது வாழ்க்கைப் பயணத்தை நாம் தொடர அது பெரிதும் பயன்படுவதாக அமையும்.



**1952ம் ஆண்டு அமைக்கப்பட்ட மாமணிக்குரிய உபயகாரர்கள்**

இதே போல வாழ்க்கையில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு சோதனையான அல்லது வேதனையான நிகழ்வில் ஏதோ ஒரு நன்மையும் கலந்திருக்கும் என்பதையும் வாழ்க்கையை ஆழமாக அவதானிக்கும் எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சந்நிதி வேலனிடம் ஆழமான பக்தி கொண்ட ஒரு குடும்பம் மானிப்பாயில் வாழ்ந்து கொண்டிருந்தது. குடும்பத் தலைவன் செல்லமுத்து அவர்கள் கொழும்பில் மிகப்பெரிய வியாபாரியாக இருந்தமையால் சந்தோசமாக அவர்களது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு பிறந்த குழந்தை அங்கக் குறைபாட்டுடன் பிறந்தமை அவர்களுக்கு தீராத மனக்கவலையை ஏற்படுத்தியது. குழந்தையின் தலையின் அமைப்பு சாதாரணமாக ஒரு குழந்தைக்கு இருக்க வேண்டிய அளவை விட மிகவும் பெரிதாகக் காணப்பட்டது.

தனக்குப் பிறந்த குழந்தையின் உருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு இவ்வாறு அசாதாரணமாக இருந்ததையிட்டு செல்லமுத்து குடும்பத்தினர் மிகவும் துன்பப்பட்டனர். துணிகளை மொத்தமாக இறக்குமதி செய்து வியாபாரம் செய்கின்ற தொழிலில் திரு. செல்லமுத்து அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் செல்வத்திற்கு குறைவு இருக்கவில்லை. ஆனால் எவ்வளவு செல்வம் இருந்தபோதிலும் குழந்தைச் செல்வத்திற்கு ஏற்பட்ட அங்கக் குறைவு என்பது அவர்களுக்கு அழியாத மனக்கவலையை ஏற்படுத்தியது.

திரு. செல்லமுத்து குடும்பம் அதிக பணத்தைச் செலவு செய்து குழந்தைக்கு வைத்தியம் செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டாலும் தெய்வ நம்பிக்கையே அவர்களிடம் மேலோங்கி இருந்தது. அதுமட்டுமன்றி இது தெய்வத்தால் மட்டுமே குணமடைய முடியும் என்பதை தமது அடிமனதில் ஆழமாக உணர்ந்து கொண்டனர்.

தீராத வினைகளைத் தீர்க்கின்ற இப்பூவுலகின் புண்ணிய தலமான சந்நிதி ஆலயத்திற்கு வந்து ஆலயத்தின் வாசலில் குழந்தையை படுக்க வைத்தனர். தெய்வ அனுக்கிரகத்தால் மட்டுமே எமது குழந்தை குணமடைய முடியும் என்றும் அந்த அனுக்கிரகத்தை சந்நிதியானே நீதானப்பா எமக்கு வழங்க வேண்டும் என்று கண்ணீர் விட்டுமன்றாடினார்கள். இவ்வாறு சந்நிதியானுடைய பாதக்கமலங்களுக்கு தங்களை அடிமைகளாக்கினர்.

அது மட்டுமன்றி தங்களிடமிருக்கும் செல்வம் தமக்கு பெரிதல்ல தமது குழந்தைதான் தமக்கு முக்கியம் என்பதை உணர்ந்தவர்களாய் அந்தச் செல்வத்தின் ஒரு பகுதியை இந்த ஆலயத்தின் திருப்பணிக்கு வழங்குவதற்கு நேர்த்தி வைத்தனர்.

இவ்வுலகில் எமக்கு கிடைத்த இந்தப்பிறப்பு, எமக்கு கிடைக்கின்ற செல்வச்சிறப்பு, அந்தச் செல்வச் சிறப்பினால் ஏற்படுகின்ற பெருமை, மதிப்பு எல்லாம் நிலையற்றது என்றும் அதே நேரம் இப்பூவுலகில் எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற துன்பம், கவலை என்பவற்றையெல்லாம் எம்மிடமுள்ள செல்வத்தினால் போக்க முடியாது. அவையெல்லாம் இறையருளினால் மட்டுமே நீங்கக்கூடியவை என்பதையும் திரு. செல்லமுத்து குடும்பம் உணர்ந்து கொண்டது.

இவ்வாறான இறை நம்பிக்கையுடைய செல்லமுத்து குடும்பம் சந்நிதியானின் மேல் அசையாத நம்பிக்கை வைத்து தமது குழந்தையுடன் தொடர்ந்து ஆலயத்திற்கு வருகை தந்து சந்நிதியானை நெஞ்சுருகி வழிபடலாயினர். இவ்வாறு சில வருடங்கள் நம்பிக்கையுடன் வழிபாடு செலுத்தி வந்த செல்லமுத்து குடும்பத்தினர் மனக்கவலையை போக்குவதற்கு சந்நிதியான் திருவுளம் கொண்டான் ஆம்! விகாரமாக அமைந்திருந்த குழந்தையின் உருவம் படிப்படியாக குணமடைந்து வருவதைக் கண்ணுற்ற பெற்றோர்கள் அகமகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்தனர். அதுமட்டுமல்ல குணமடையத் தொடங்கிய குறுகிய காலத்தில் குழந்தையின் அமைப்பு சாதாரண குழந்தையின் உருவ அமைப்பிற்கு மாற்றம் பெற்று விட்டது.

இவ்வாறு குழந்தை பூரணமாக குணமடைந்த நிலையில் செல்லமுத்து குடும்பத்தினர் தமது குழந்தை குணமடைந்த அதிசயத்தையும் அவ்வாறு குணமடைந்ததன் தெய்வ அனுக்கிரகத்தையும் எண்ணி அளவிடமுடியாத ஆனந்தம் அடைந்த அதே வேளை தாமும் சந்நிதியானுக்கு நேர்த்தியாக நினைத்திருந்ததும் சந்நிதியானுக்கு சிறப்பை ஏற்படுத்தக் கூடியதுமான அந்தக் கைங்கரியத்தை மேற்கொள்வதற்கு முடிவு செய்தனர்.


ஆம்! அவர்கள் ஏற்கனவே தாம் மனதிற்குள் நேர்த்தி வைத்தபடி வானுயர்ந்த காண்டாமணிக் கோபுரத்தை அமைத்து ஆலயத்தைச் சூழ மிகவும் அகன்ற நிலப்பரப்பிற்கு சந்நிதியானுடைய ஆலயமணி ஒலிப்பதற்கும் ஒழுங்குகள் செய்தனர். இவ்வாறு ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் அந்த ஆற்றங்கரை வடிவழகனது நாமங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரிக்கக்கூடியதாக மிகப்பெரிய காண்டாமணியை ஆலயத்திற்கு அமைக்கும் பணி 1952ம் ஆண்டு நிறைவேற்றி முடிக்கப்பட்டது. மேலும் குழந்தையின் தலை குணமடைவதற்கு முன்பு எவ்வளவு உருவத்தில் இருந்ததோ அதே அளவு உருவம் உள்ளதாக நாதத்தினை ஏற்படுத்தும் அந்த மணியினது நாக்கும் அமைந்திருந்தது.

இவ்விதமாக பிரமாண்டமான காண்டாமணி ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்ட பொழுது காண்டாமணிக் கோபுரம் அமைப்பதற்கு கப்புக்களாக மிகவும் உயர்ந்த தனிப் பனைமரங்கள் நாட்டப்பட்டு கோபுரம் அமைக்கப்பட்டதையும் அவ்வளவு உயரமான இடத்திற்கு காண்டாமணி மேலே கொண்டு செல்லப்பட்டு பொருத்தப்பட்டதையும் அதிசயமான காட்சிகளாக அனைவரும் சென்று பார்வையிட்டதையும் பல அன்பர்கள் வியப்புடன் தற்பொழுது நினைவு கூறுகின்றனர்.



2002இல் இலண்டனில் தயாரிக்கப்பட்ட
இரண்டாவது மணி

மேலும் பிரித்தானியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட அந்த மணியோசை எழுப்பும் குண்டலம் போன்ற நாக்கு முதல்முறை பரீட்சிக்கப்பட்ட பொழுது அதன் நாதத்தில் திருப்தியடையாத திரு. செல்லமுத்து அவர்கள் அதனை பிரித்தானியாவிற்கு திருப்பி அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை விட சிறப்பாக நாதத்தை எழுப்பும் புதிய நாக்கை வரவழைத்தே இறுதியாக ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் காண்டாமணியை ஆலயத்தில் ஒலிக்க விட்டதை ஆலயத்தின் மூத்த பூசகர்கள் தற்பொழுது நினைவு கூறுகின்றனர்.

சந்நிதி ஆலயத்தில் திருப்பணி வேலைகள் பலரால் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் மானிப்பாய் செல்லமுத்து அவர்கள் செய்த திருப்பணி வித்தியாசமானது இவரது ஆலயத் திருப்பணி மிகவும் பெரியது, மிகவும் புனிதமானது. அதுமட்டுமன்றி மிக அதிகமான மக்கள் தினமும் பல முறை சந்நிதியானை மனதில் பூசிக்கத்தூ ண்டு கோளாக அமைந்திருந்தது என்பதை இவ்விடத்தில் நாம் குறிப்பிடவேண்டியது அவசியமானதாகும்.

திரு. செல்லமுத்து அவர்களால் 1952ம் ஆண்டு அமைக்கப்பட்ட அந்த மணி 1986ஆம் ஆண்டு அழிவடைந்தாலும் அவர் உருவாக்கிய காண்டாமணிக் கோபுரத்தில் அவர் காட்டிய பாதையில் அதற்கு ஈடான புதிய மணி சந்நிதியானின் அடியவர்களால் தற்போது 2002இல் ஏற்படுத்தப்பட்டு இருப்பது சந்நிதியானுடன் தொடர்புடைய அனைவருக்கும் உவப்பூட்டும் ஒரு விடயம் என்பதை சொல்லத்தான் வேண்டுமா?

ஓம்முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஏழு

யோகிகள் ஞானிகள் சித்தர்கள் உலாவுகின்ற இடமாக சந்நிதி ஆலயம் இருந்து வருகின்றது. இப்படிப்பட்டவர்கள் ஆலயச்சூழலில் உறைவதன் மூலம் அவர்கள் தங்களைப் பக்குவப்படுத்துவது மட்டுமன்றி மற்றவர்களும் பக்குவப்படுவதற்கு காரணமாக இருந்து வந்துள்ளனர் என்பது காலம் காலமாகவே நடந்து வரும் நிகழ்வுகளாகும் மேலும் இத்தகைய நிகழ்வுகள் சம்பவங்கள் எல்லாம் ஆரவாரம் அற்ற வகையில் மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் நடைபெற்று வருவதையும் நாம் உணரமுடிகின்றது.

இருந்த போதிலும் இவ்வாறு யோகிகள், ஞானிகளுக்கு நடைபெறுகின்ற மிகவும் அரிதான சம்பவங்களே மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாகவும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றன. அத்தகைய ஒரு சம்பவத்தை அடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

யோக சுவாமிகளின் முக்கியமான சீடர்களில் ஒருவராக வாழ்ந்தவர் தான் செல்லத்துரை சுவாமிகள். அதுமட்டுமன்றி யோக சுவாமிகளாலேயே சிவத்தொண்டன்நிலையத்திற்கு பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகின்ற பாக்கியம் பெற்றவர். அரை நூற்றாண்டு காலம் செல்லத்துரை சுவாமிகள் செய்த சிவத்தொண்டுகள் யாவும் யாழ்ப்பாணம், செங்கலடி ஆகிய இரண்டு சிவதொண்டன் நிலையங்களின் பொறுப்பாளர் என்ற நிலையிலிருந்து மேற்கொள்ளப்பட்டதனால் அவை அனைத்துமே காத்திரமான பொறுப்புள்ள தொண்டுகளாக அமைந்திருந்தன. இவ்வாறு ஈழத்தில் எல்லோராலும் மதிக்கப்படுகின்றவராகவும் அதேநேரம் பக்குவநிலை அடைந்தவராகவும் தவவாழ்க்கை வாழ்ந்தவர் தான் செல்லத்துரை சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான வள்ளலாக விளங்கிய செல்லத்துரை சுவாமிகள் இளமைக்காலத்தில் இலங்கையின் தென்பகுதியில் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டிருக்கும் காலத்திலேயே ஆன்மீகத் தேடலில் ஈடுபடலானார். அப்பொழுது அவர் கதிர்காமக்கந்தனிடமும், தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனிடமும் அதிகளவு ஈடுபாடு கொண்டிருந்தார். விடுமுறை காலங்களில் இந்த இரண்டு ஆலயங்களுக்குச் செல்வதிலும் அங்கே தங்கியிருந்து தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்வதிலும் அதிக நாட்டம் கெர்டிருந்தார். அத்துடன் தலயாத்திரைக்காக இந்தியா சென்று வருவதும் அவரது வழமையான செயற்பாடுகளாக இருந்தன.

செல்லத்துரை சுவாமிகள் யாழப்பாணம் சிவத்தொண்டன் நிலையத்தை வழி நடத்திக்கொண்டிருந்த காலப்பகுதியில் அதாவது 2002ம் ஆண்டு சுவாமிகளை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சந்திக்கும் அரிய வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது. அப்பொழுது சுவாமிகள் தனது ஆன்மீக அனுபவங்கள் பற்றியும் ஆசிரியர் தொழில் தொடர்பான அனுபவங்கள் பற்றியும் இன்னும் பல விடயங்களை அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள். அவை அனைத்தும் பசுமையான நினைவுகளாக என் மனக்கண்முன் இன்றும் உள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஓர் அங்கமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை வருடாவருடம் வைகாசிப் பெருவிழாவை ஆச்சிரம மண்டபத்தில் நடாத்திவருவது வழக்கம். பொது நிகழ்வுகளில் அரிதாகக் கலந்து கொள்ளுகின்ற செல்லத்துரை சுவாமிகள் 2002ம் ஆண்டு நாம் நடாத்திய அந்த வைகாசி விசாக விழாவில் அருள் உரை வழங்குவதற்கு வருகை தந்திருந்தாகள்.

அப்பொழுது செல்லத்துரை சுவாமிகள் தான் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு அதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் சந்நிதியான் தனக்கு நிகழ்த்திய அற்புத நிகழ்வு ஒன்றை அங்கே ஆச்சிரம மண்டபத்தில் கூடியிருந்த அடியார்கள் மத்தியில் உணர்வுபூர்வமாகப் பகிர்ந்து கொண்டார்கள். இவ்வாறு செல்லத்துரை சுவாமிகள் அடியார்களுடன் பகிர்ந்து கொண்ட அந்த அற்புத நிகழ்வை இங்கே வாசகர்களுக்கும் வழங்குகின்றோம்.

ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தென்மேற்கு திசையில் மேடை போன்ற ஒரு இடத்தில் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். அக்காலகட்டத்தில் சுவாமிகள் இவ்வாறு ஆலயத்திற்கு அடிக்கடி வருவதும் அப்பகுதியில் உலாவி வருவதும் வழமையான நிகழ்வுகளாகும். இவ்வாறு ஆலயத்திற்கு வந்து செல்கின்ற சந்தர்ப்பத்தில்தான் சுவாமிகள் மேற்கூறியவாறு தனிமையில் படுத்திருந்தவாறு ஆன்மீக சிந்தனையில் மூழ்கி இருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் எம் எல்லோருக்கும் ஏற்படுவது போன்று செல்லத்துரை சுவாமிகளுக்கும் மனதில் பின்வருமாறு ஒரு சபலம் தோன்றியது.

**“சந்நிதியானை கண்கண்ட தெய்வமென ஆயிரக்கணக்கான அடியார்கள் தினமும் வழிபடுகின்றனர். அவ்வாறான அடியார்களில் நானும் ஒருவனாகத்தான் இருக்கின்றேன் ஆனாலும் இறைவன் இருப்பதாக கூறப்படுவதெல்லாம் உண்மைதானா? சந்நிதி முருகன் உண்மையாகவே பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றானா? என்ற சந்தேகம் அவர் மனதில் வழமைக்கு மாறாக எங்கிருந்தோ ஏற்பட்டது”**

என்ன அதிசயம் செல்லத்துரை சுவாமிகளுக்கு இறையருள் பற்றி இவ்வாறு ஏற்பட்ட அந்த சந்தேகத்திற்கு சந்நிதியான் உடனடியாகவே அந்த இடத்திலேயே தெளிவை ஏற்படுத்தி விட்டான் ஆம்! செல்லத்துரை சுவாமிகள் சந்நிதியானின் இறை அருளை முழுமையாக உணரக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்தை அப்பொழுது அங்கேயே அரங்கேற்றி விட்டான். இவ்வாறு இறையருள் பற்றி குழப்பம் ஏற்பட்ட சிறிது நேரத்தில் சந்நிதி ஆலயத்தில் மேற்குப்பக்க வீதியில் இரண்டு இளைஞர்கள் சுவாமிகளுக்கு தென்பட்டனர். அதில் ஒரு இளைஞன் துவிச்சக்கர வண்டியில் இருக்க மற்ற இளைஞன் அவனை ஏற்றி ஓடியவாறு அங்கே வந்துகொண்டிருந்தான். அப்படி வந்தவர்களில் துவிச்சக்கர வண்டியை ஓடி வந்தவன் மற்ற இளைஞனை அங்கே இறக்கிவிட்டு தான் திரும்பிச் சென்றுவிட்டான்.

இறக்கிவிடப்பட்ட இளைஞன் ஒரு பேய் பிடித்தவன் போல காணப்பட்டான். தடுமாற்றமான மனநிலையில் காணப்பட்ட அந்த இறக்கிவிடப்பட்ட இளைஞன் சந்நிதியானுடைய ஆலயத்தை உற்று நோக்கி விட்டு பின்பு செல்லத்துரை சுவாமிகள் பக்கம் திரும்பிப்பார்த்தான். இவ்வாறு செல்லத்துரை சுவாமிகளை நோக்கிய அந்த இளைஞன் தனக்கு தண்ணீர்த்தாகம் என்றும் தனக்கு குடிப்பதற்கு தண்ணீர் தரும்படியும் சைகை காட்டினான். அவன் தனது இரண்டு கைகளையும் ஒன்றாக்கி கையை வாயின் அருகில் கொண்டு சென்று அந்தக்கைகளால் தண்ணீர் குடிப்பது போன்ற காட்சியை ஏற்படுத்தி அக்காட்சியின் மூலம் தனக்குத் தண்ணீர் தருமாறு கேட்பதாக அந்த சைகை அமைந்திருந்தது.

தனக்குத்தாகம் தண்ணீர் தருமாறு கேட்டுக்கொண்ட அந்த இளைஞனது நிலைமையைப் புரிந்துகொண்ட செல்லத்துரை சுவாமிகள் சந்நிதியான் ஆலயத்தின் தென்மேற்குத் திசையில் மேடைபோன்று தான் படுத்திருந்த அந்த இடத்தில் இருந்து எழுந்து சென்று கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து அந்த இளைஞன் கைகளில் ஊற்றிய பொழுது இளைஞனும் தனது தாகம தீர தண்ணீரை அருந்தினான்.


அவ்வாறு நீரை அருந்தியவனது தாகம் தீர்ந்தது. தாகம் தீர்ந்த திருப்தி முகத்தில் தென்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல அவனது முகத்தில் தென்பட்ட சோர்வு வெறுப்பு என்பன மறைந்து ஒருவித பூரிப்பும் மலர்ச்சியும் ஏற்பட்டது. அந்த இளைஞன் வரும்பொழுது அவனில் காணப்பட்ட நோயின் தன்மைகள் அனைத்தும் அந்த இடத்திலேயே நீங்கி விட்டது.

இவ்வாறு நோய் நீங்கப்பெற்ற இளைஞனே செல்லத்துரை சுவாமிகளுக்கு தனக்கு நோய் குணமடைந் திருப்பதையும் தான் எவ்வாறு எந்த சூழ்நிலையில் சந்நிதிக்கு அழைத்து வரப்பட்டேன் என்பதையும் விபரமாக எடுத்துக்கூறினான்.



யோக சுவாமிகள்

தனக்கு நீண்ட நாட்களாக பித்துப்பிடித்தது போன்ற ஒருவகையான நோய் காணப்பட்டது எனவும் அந்த நோயைக் குணப்படுத்துவதற்குரிய பிராயச்சித்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு பின்னர் இறுதியாக தான் சந்நிதிக்கு அழைத்து வரப்பட்டது பற்றி எடுத்துக் கூறினான். சந்நிதியானிடம் சென்று அவனது பாதங்களை பணிவதனூடாகவே தனது சுகவீனத்தை முழுமையாக மாற்ற முடியுமென்ற நம்பிக்கையுடனேயே தான் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்ட நிகழ்வையும், அங்கே வந்த பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நோய் குணமடைந்திருக்கின்ற அற்புதத்தையும் அந்த இளைஞன் சுவாமிகளுக்கு பயபக்தியுடன் எடுத்துக்கூறினான்.

இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நதிதி ஆலயத்தில் இறைநம்பிக்கை பற்றியும், சந்நிதியான் திருவருள் பற்றியும், தனக்கு ஏற்பட்ட சஞ்சல உணர்வினையும் அதற்கு அந்த இளைஞன் மூலம் சந்நிதியான் தனக்கு உடனடியாகவே நிகழ்த்திய திருவிளையாடலையும் தனக்குள்ளே நினைத்து சுவாமிகள் உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.



செல்லத்துரை சுவாமிகள்

சுவாமிகளினுடைய அருளுரை நிறைவு பெற்ற பின் சுவாமிகள் அடியேனுடன் தனியாக உரையாடிய பொழுது சந்நிதியானுடைய ஒரு சில அற்புத நிகழ்வுகள் மட்டுமே நாம் ஏனைய அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடியவை எனவும் அதிகமானவை அவரவர்கள் தாமாகவே தமக்குள் உணர்ந்து கொள்ள வேண்டியவை என்பதையும் பக்குவமாக அடியேனிடம் வெளிப்படுத்தினார்கள். ஆனாலும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுணர்வு தூண்டியதால் இச் சம்பவத்தை இங்கே நான் அடியார்கள் முன்னிலையில் வெளிப்படுத்தும் நிலை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்கள்.

செல்லத்துரை சுவாமிகள் மட்டுமல்ல அவரது குருநாதரும் யாழ் மண்ணின் தவயோகியுமாகிய யோக சுவாமிகளும் பலமுறை தரிசனம் செய்த ஆலயம் சந்நிதியான் ஆலயம். அதுமட்டுமல்ல ஒருமுறை இவ்வாலயத்திற்கு தரிசனம் செய்ய வந்த யோக சுவாமிகள் **இந்த ஆலய வீதியில் நிலத்தில் எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்களும் தீபங்களும் காட்சி தருகின்றனவே இங்கே எவ்வாறு எனது பாதங்களைப் பதிப்பேன்** என ஆதங்கப்பட்டு அதனை தன்னுடன் கூட வந்த அடியார்களுக்கு எடுத்துக்கூறியுள்ளார்கள். ஆம்! இவ்வாலயத்தின் புனிதத்தன்மை எமது ஊனக்கண்களுக்குத் தெரியாவிட்டாலும் ஞானிகளின் ஞானக் கண்களுக்கு நன்கு தெளிவாகவே தெரிகின்றமையால் தான் காலங்காலமாக அவர்கள் இவ்வாலயச்சூழலில் தவவாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திதியான் எட்டு

அன்பு, பண்பு, அமைதி, அடக்கம், உண்மை, பொறுமை, ஆன்மீகநம்பிக்கை இவற்றுடன் சமூகத்தொண்டு இவ்வாறான இயல்புள்ள ஒருவரை நாம் வாழ்க்கையில் சந்திப்பது கடினமான காரியம் என்று கூறுவதைவிட மிகவும்கடினமான காரியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அவ்வாறானவர்களும் இந்த உலகில் இலை மறை காயாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் .

சந்நிதியில் நாம் தினமும் சந்தித்துக் கொண்டிருக்கின்ற அவ்வாறான அன்பர் ஒருவரையே இங்கே குறிப்பிடுகின்றோம் ஆனால் அவர் மற்றவர்களால் இலகுவில் இனம் கண்டு கொள்ள முடியாத எளிமையான தோற்றத்துடன் இலகுவான ஒரு தொழிலை மேற்கொண்டிருப்பவராகவும் காணப்படுகின்றார்.


ஆம்! அவர் வேறுயாரும் அல்ல ஆலயத்தின் வடக்கு வீதியில் மர நிழலில் நின்றவாறே அடியார்களுக்கு கற்பூரம் விற்றுக்கொண்டிருக்கின்ற அன்பர் திரு. வே. கந்தசாமி அவர்கள்தான். அவர் ஒரு விழிப்புலன் அற்றவர் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு வெள்ளைப்பிரம்பு அங்கே காணப்படுவதுடன் அவர் பயன்படுத்தும் மேசையின் முகப்பில் விழிப்புலன் அற்றோர் சங்கம் என்ற விலாசமும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

கண்தெரியாத அன்பரைப்போய் இவ்வளவு பெறுமதியான ஒரு மனிதர், இவ்வளவு பண்புகள் நிறைந்த மனிதர் என்று குறிப்பிடுவதாக அடியார்கள் நினைக்கலாம். ஆனால் அவருடைய வாழ்க்கையின் போக்கு, அவர் சந்நிதியில் இருந்து வாழ்ந்து வரும் வாழ்க்கை அவர் செய்கின்ற சமூகத்தொண்டு என்பன எல்லாம் உண்மையில் அவர் ஒரு சராசரி மனிதனைவிட உயர்ந்த ஒருவராகவே மதிக்கப்படவேண்டியவர் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.



**ஆலய வடக்குவீதியில் மர நிழலில்
வே. கந்தசாமி கற்பூரம் விற்கும் காட்சி**

திரு. கந்தசாமி அவர்களுக்கு 11வயது நடக்கும்பொழுது அம்மை நோய் என அழைக்கப்படும் பொக்குளிப்பான் நோய் காரணமாக தனது கண்பார்வையை முற்றாக இழக்கும் பரிதாப நிலை அவருக்கு ஏற்பட்டது. இவ்வாறு இவர் தனது கண் பார்வையை இழந்து பரிதவித்த வேளை இடைக்காட்டை சேர்ந்த அ. சிதம்பரப்பிள்ளை என்ற அன்பரே 1954ஆம் ஆண்டு இவரை சந்நிதி ஆலயத்திற்கு அழைத்து வந்து இவர் இங்கே தங்கி வாழ்வதற்குரிய ஆரம்ப ஒழுங்குகளை செய்த அன்பராவார்.

சந்நிதியானிடம் நீ போய் சேர்ந்தால் கலியுகக்கந்தனாகிய ஆற்றங்கரையான் எந்தக்குறையும் இல்லாமல் உன்னை வாழ வைப்பான் என்று சிதம்பரப்பிள்ளை அவர்கள் கூறிய ஆலோசனையை ஏற்று சந்நிதியானிடம் வந்து சேர்ந்த திரு. கந்தசாமி அவர்கள் ஆசாரசீலராய் சந்நிதியானை தினமும் மெய்யுருகி வழிபாடு செய்து வந்தார்கள். அத்துடன் தன்னை முழுமையாக சந்நிதியானிடம் சரணாகதி ஆக்கிக்கொண்டு கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்படாதா? தனக்கு நல்ல பாதையொன்றை ஏற்படுத்தமாட்டாயா? என்ற ஆதங்கத்தையும் தனது வழிபாட்டின் பொழுது வெளிப்படுத்தத் தவறவில்லை.

வாழ்க்கையில் திக்குத்திசை தெரியாது அல்லல் படுபவர்கள் மற்றும் ஆதரவற்றவர்களை அரவணைக்கின்ற அற்புதத் தெய்வமாகிய சந்நிதியானுடைய செவிகளுக்கு இவருடைய வேண்டுதல் சென்றடைந்தது.

பெற்றோர், உற்றார், உறவினர் என்ற அனைவராகவும் உண்ணைத்தானப்பா நான் நினைக்கின்றேன்! நீதானப்பா எனக்கு தஞ்சம்! என்ற நினைவுகளுடன் சந்நிதியானை வணங்கிவிட்டு நித்திரைக்கு சென்ற கந்தசாமி அவர்களுக்கு சந்நிதியான் கனவிலே காட்சிகொடுத்து பின்வருமாறு கூறி மறைந்தருளினார்.

**"அன்பனே உனக்கு கண்பார்வை மீண்டும் கிடைப்பதற்கு வழி இல்லை. ஆனால் நீ நீண்ட ஆயுளுடன் எந்தத்துன்பமும் இல்லாது சந்நிதியில் இருந்து வாழலாம்."**

தனது வேண்டுதலுக்கு இணங்க சந்நிதியான் தனது வாழ்க்கை பற்றிய உண்மைநிலையை கனவிலே காட்சி தந்து எடுத்துக்கூறிய நாளில் இருந்து திரு.வே. கந்தசுவாமி அவர்கள் தனது வாழ்க்கைக்குரிய பாதையை தனது மனதிற்குள் திடமாக முடிவெடுத்து அந்தப்பாதையை உறுதியுடன் கடைப்பிடித்து வாழ்ந்து வருவதை நாம் இன்றும் காணமுடிகிறது. அதாவது கடந்த அறுபது ஆண்டுகளாக கனவில் வெளிப்படுத்தப்பட்டது போன்ற அதே வாழ்வை சந்நிதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

திரு. கந்தசுவாமி அவர்கள் ஆலயவாசலில் இருந்து கற்பூரம் விற்பனை செய்கின்ற தொழிலை பண்பாகவும் பாங்காகவும் நடாத்தி வருகின்றார் என்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வியாபாரி தர்மநெறிப்படி தனது தொழிலை எவ்வாறு மேற்கொள்ளலாம், மேற்கொள்ளவேண்டும் என்பதற்கு சிறந்த முன் உதாரணமாக திரு. கந்தசுவாமி அவர்கள் தனது தொழிலை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவரது தொழிலில் சேவை நோக்கமும் கலந்திருப்பதை அவதானிக்கலாம் ஆலயத்தை தரிசிக்க செல்பவர்களுடைய பொருட்களை பாதுகாத்து கொடுத்தல் ஆலயத்தில் பெற்றுக்கொண்ட திருநீற்றை கொண்டு செல்வதற்கு துண்டுப்பேப்பர்களை தேவையானவர்களுக்கு வழங்குதல் கற்பூரம் கொழுத்துவதற்கு தீப்பெட்டி வழங்கி உதவுதல் ஆலயத்திற்கு வருபவர்களுக்கு பூசை தொடர்பான விளக்கங்களையும் சரியான தகவல்களையும் வழங்குதல் ஆலயத்தில் தவறவிடப்பட்டிருக்கும் பொருட்களை அதை கண்டெடுப்பவர்களிடம் பெற்று உரியவர்களுக்கு வழங்குதல் போன்ற பல நல்ல காரியங்களையெல்லாம் அவர் செய்து வருவதை நாம் அவதானிக்கமுடியும்.

மேலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வியாபாரியும் நுகர்வோனும் நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படுவதாக அறிந்திருக்கின்றோம். அதாவது பஸ்சில் நடத்துனர் இல்லாமலே பிரயாணிகள் பிரயாணம் செய்யும் ஒழுங்குகள் இருக்கின்றன அதேபோல அங்கே வாடிக்கையாளர் தாமே தமக்குரிய பொருட்களை எடுத்துச் சென்று உரியபணத்தை உரிய இடத்தில் செலுத்தி தமது பொருட்களை எடுத்துச் செல்வது போல நேர்மையான வியாபாரி நேர்மையான வாடிக்கையாளர் என்பதை யாராவது இங்கே எமது நாட்டிலும் பார்க்க விரும்பினால் அதை திரு. வே. கந்தசாமி அவர்கள் தொழில் நடத்தும் இடத்திற்கு சென்று அவர் செய்யும் தொழிலின் பாங்கினை பார்வையிடுவதன் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

திரு. கந்தசாமி அவர்கள் யாழ்மாவட்ட விழிப்புலன் அற்றோர் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் ஒருவராக இருந்து செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாவற்றையும் விட விழிப்புலன் அற்றோர் சங்கத்தில் கல்விப்பிரிவு என்ற ஓர் தனிப்பிரிவை ஆரம்பிப்பதற்கு மூல காரணமாக இருந்து அதன் ஆரம்ப நிதியாக தனது நேர்மையான தொழிலால் சிறிதுசிறிதாக உழைத்த பத்தாயிரம் ரூபாவை அதற்காக ஏறத்தாள 35 வருடங்களுக்கு முன்பே வழங்கி அந்த செயற்திட்டத்தை ஆரம்பித்தமை உண்மையில் எமது உள்ளத்தைத் தொடுவதாகவே உள்ளது.

இது பற்றி எல்லாம் கந்தசாமி அவர்களிடம் கேட்டபொழுது இதில் என்னுடைய செயற்பாடு எதுவுமில்லை இது சந்நிதியானுடைய திருவருள். நான் இந்த ஆலயத்திற்கு வந்ததே எனக்கு வாழ்க்கையில் கிடைத்த பெரும்பேறு அவ்வாறு வந்திருக்காவிட்டால் எனது வாழ்க்கை எவ்வளவு துன்பம் நிறைந்ததாக இருந்திருக்கும் என்று நினைத்துப்பார்க்கும் பொழுது எனது நெஞ்சம் கலங்குகின்றது என்று அவர் கூறிய பொழுது அவரது வார்த்தையிலும் முகத்திலும் தென்பட்ட உணர்வு எமது உள்ளத்தையும் உருக்குகின்ற சோகம் நிறைந்த காட்சியாக காணப்பட்டது.

சந்நிதியானை நான் நம்பி வந்தேன். நான் நம்பி வந்தது போல சந்நிதியான் எனக்கு எந்தவித நோய்நொடிகளையோ துன்பங்களையோ தராது என்னை இங்கே வாழவைத்துக் கொண்டிருக்கின்றான்.

எனக்கு கண் பார்வை கிடைக்கவில்லை என்பதையிட்டு எனக்கு வருத்தம் இல்லை அது எனக்கு எழுதிய எழுத்து. ஆனால் **கண்பார்வை போனபின்பு மீண்டும் அது கிடைப்பதற்கு வழி இல்லை என்ற உண்மையை வெளிப்படுத்திய அதே நேரம் இந்த மண்ணில் நானும் ஒரு மனிதன் என்ற நிலையில் மற்றவர்களுக்கு பாரமாக இல்லாது வாழ்வதற்கு வழி காட்டி வாழவைத்துக் கொண்டிருப்பது தான் கண் பார்வை கிடைப்பதை விட எனக்கு மேலான விடயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை சந்நிதியான் ஏற்படுத்தி என்னை மனநிறைவுடன் வாழவைத்துக் கொண்டிருக்கின்றான் என கந்தசாமி அவர்கள் அடியேனிடம் தெரிவித்து சந்நிதியானது நாமங்களை உச்சரித்து அவரை வழிபாடு செய்தார்கள்.

வே. கந்தசாமி அவர்களை இரண்டாயிரத்துப் பதினான்கில் ஆலயத்தில் வழமை போல சந்தித்து உரையாடினேன். அப்பொழுது அவர் யாழ் மாவட்ட விழப்புலனற்றோர் சங்கத்தின் ஊடாக விழிப்புலனற்றவர்களின் கல்விக்கான செயல்பாட்டை மேலும் சிறப்பாக செய்து வருவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அத்துடன் அவ்வாறு தாம் உதவி செய்த விழிப்புலனற்ற பல பிள்ளைகள் இன்று சட்டத்தரணிகளாகவும் ஆசிரியர்களாகவும் இதுபோன்ற பல பதவிகளை தற்பொழுது சமூகத்தில் வகித்துக்கொண்டிருப்பதன் பெயர் விபரங்களையும் அடியேனிடம் விபரமாக ஆதாரத்துடன் எடுத்துக் கூறினார்கள்.

விழிப்புலனற்றவர்களுக்காகவே தனது சிந்தனை, செயற்பாடு, உழைப்பு, வருமானம் அனைத்தையும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் விழிப்புலனற்ற கந்தசாமி சந்நிதியானின் அருளிற்கு பாத்திரமானவர் மட்டுமல்ல நிச்சயமாக சமுதாயத்தாலும் போற்றப்பட வேண்டிய ஒரு பெருமகன் ஆவார்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஒன்பது

பசு பால் தரும் என சிறுவயதில் படித்திருக்கின்றோம் பசு எமது வாழ்க்கையுடன் தொடர்புபட்ட ஒரு மிருகம் என்ற எண்ணக்கரு எமக்கு ஆரம்ப வகுப்புக்களிலேயே புகட்டப்பட்டாலும் அது பால் தருகின்ற ஒரு மிருகம் மட்டுமன்றி எமது சமயம் பண்பாடு வாழ்க்கை என்பவற்றுடனும் இரண்டறக் கலந்துள்ள ஒரு மிருகமாகும். மேலும் கோமாதா வழிபாடு என்ற நிலைக்கு உயர்வான இடத்தில் வைத்து மதிக்கப்படுகின்ற ஒரு மிருகம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் ஆன்மீக ஈடுபாடு கொண்ட அன்பர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் கோமாதாவிற்கும் பூசை நடாத்தப்படுவதை அங்கே அடியார்கள் இப்பொழுதும் காணமுடியும்.

ஏனைய மிருகங்களின் கழிவினைக்கண்டு அருவருத்து ஒதுங்கிச் செல்கின்ற நாம் பசுவின் கழிவான சாணத்தை பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம். ஏன் நாம் புனிதமாகக் கருதி அணியும் திருநீறாகவும் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு பசுவின் முக்கியத்துவத்தைக் கூறுவதால் காளைமாடுகள் முக்கியமானவை அல்ல என்பது அர்த்தமல்ல. ஆரம்ப காலத்திலிருந்து மனித சமுதாயத்தின் பல்வேறு தொழில்களுக்கு காளை மாடுகள் பயன்பட்டது போன்று வேறு எந்த மிருகமும் பயன்படவில்லை என்பதும் நாங்கள் அறிந்தவையே.


இவ்வாறு எமது சமுதாயத்தில் புனித மானவையாக மாடுகள் விளங்கிவருவதனால் இந்து மக்கள் அதிகம் வாழும் நாடான இந்தியாவில் மாடுகள் புனிதமானவையாகவும் மாட்டினை வெட்டுதல் வெறுத்து ஒதுக்கப்படும் அம்சங்களாகவும் கருதப்படுகின்றன. அதுமட்டுமன்றி இவ்வாறான சிறப்புக்களுக்குரிய மாடுகள் தொடர்பான உணர்வுபூர்வமான பல்வேறு வாழ்க்கை அனுபவங்களை அன்றாடம் மக்கள் அனுபவித்து வருவதையும் நாங்கள் அறிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே சந்நிதியானுடைய பூசைப்பொருட்களை ஏற்றி இறக்கி சந்நிதியானுடைய அன்றாட பூசை நிகழ்வுகளுக்கு உதவி வருகின்ற காளை மாடு தொடர்பான அற்புத அனுபவங்களையும் அந்தக்காளை மாட்டினால் நடந்தேறியுள்ள அற்புதமான நிகழ்வுகளையும் அடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆலயத்தின் பிரதான பூசகர்களில் ஒருவரான உலககுருநாத ஐயர் அவர்களுக்கு சொந்தமான இந்த மாட்டின் தலையில் தெய்வீக அம்சத்திற்குரிய சங்கின் அடையாளமும் காணப்படுகிறது.



பிரதம பூசகர் க. உலககுருநாதன் ஐயர்

பத்து வயதைத் தாண்டி விட்ட இந்தக் காளை மாடு ஆலயத் தேவைகளுக்கே அதிகமாக பயன்படுத்தப்படுவது வழக்கம். வீட்டில் இருந்து ஆலயத்திற்குரிய பூசைப்பொருட்களை வண்டிலில் ஏற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் ஆலயத்தில் மடைப்பள்ளிக்கு அருகில் பொருட்களை இறக்கவேண்டிய குறிப்பிட்ட இடத்திற்கு அது தானாகவே வந்து சேரும். அதே போன்று ஆலயத்தில் இருந்தும் பொருட்களுடன் வீட்டிற்கு வண்டிலைப் பொருட்களுடன் தானாகவே இழுத்துச்செல்லும்.

இவ்வாறு ஆலயத்திற்கு பயன்படுகின்ற ஆலயத்திற்கு தொண்டு செய்கின்ற மாடாக இருந்த பொழுதிலும் இந்த மாட்டின் மீதும் கள்வர்கள் தங்கள் கைவரிசையை காட்டத்தவறவில்லை. 2001 ஆம் ஆண்டு ஆலயத்தின் தெற்குத்திசையில் கந்தசாமிஐயர் மடம் என அழைக்கப்படும் உலககுருநாதன் ஐயர் வளவினுள் வழமைபோல கட்டப்பட்டிருந்தபொழுது ஒருநாள் இரவு இந்த மாடு களவுபோய்விட்டது. இதனைக் களவு எடுத்தவர்கள் மிகவும் கச்சிதமாக தமக்கே உரித்தான பாணியில் களவு கொடுத்தவர்கள் மீண்டும் மீட்டுக்கொள்ள முடியாத வகையில் தூரஇடத்திற்கு கடத்திச்சென்று விட்டனர் .

மாடு களவுபோன செய்தியை அறிந்த உலககுருநாதஐயர் அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகினர். அதன்மீது அவர்கள் காட்டிய அன்பு அது ஆற்றிய கடமைகள் மேலும் நீண்ட காலம் அவர்களுடன் ஒருவர்போல வாழ்ந்த சம்பவங்களை நினைத்து துன்பத்துள் மூழ்கிப்போயினர் அத்துடன் ஆலயத்துடன் தொடர்புடைய அன்பர்களும் அந்த மாட்டினது தனித்துவத்தையும் அது ஆலயத்திற்கு பயன்பட்ட பாங்கினையும் நினைத்து துன்பப்படலாயினர். ஆனால் உலககுருநாதஐயர் அவர்கள் தனக்கே உரித்தான தனித்துவமான பாணியில் இந்த மாடு சந்நிதியானை விட்டுப்போகாது அது எப்படியும் திரும்பி வந்துவிடும் என்று உறுதியாக நம்பியது மட்டுமல்ல மற்றவர்களுக்கும் அதனை உறுதியாக வெளிப்படுத்தத் தவறவில்லை.

ஆனால் இதனை யாரும் நம்பவில்லை அந்த மாடு களவு போன அன்று அல்லது அடுத்த நாள் இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கும். இவ்வாறு வெட்டப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டை திரும்பி வரும் என்று எதிர்பார்ப்பது நடக்கக்கூடிய காரியமா? என பலரும் தமக்குள் பேசிக்கொண்டனர்.

களவு கொடுத்தவர்கள் நிலமை இவ்வாறு காணப்பட களவு எடுத்துச்சென்றவர்கள் நிலமைகளும் சம்பவங்களும் எதிர்பாராத வகைகளாக நடந்து கொண்டிருந்தன. மாட்டினை களவு எடுத்துச் சென்றவர்கள் கரவெட்டிப்பகுதிக்கு கொண்டு சென்று அங்கே சில நாட்கள் வைத்திருந்த பின் பருத்தித்துறையில் உள்ள மாட்டிறைச்சிக்கடைக்கு இதனை இறைச்சிக்காக விற்பதற்காக கொண்டு சென்றனர். இறைச்சிக்கடைக்காரர் மனதில் என்ன தோன்றியதோ தெரியவில்லை அதனை வாங்குவதற்கு விரும்பவில்லை. இது மாட்டினைக்கொண்டு சென்றவருக்கு பெருத்த ஏமாற்றத்தினைக் கொடுத்தது. இந்த நிலையில் மாட்டினை விற்பதற்குக் கொண்டு சென்றவர் வேறு வழியில்லாமல் அதனைக்கொண்டு சென்று அதே பாதையால் மீண்டும் திருப்பி கரவெட்டியிலுள்ள தனது வீட்டிற்கே கூட்டிச்செல்லும் நிலமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மாட்டினை மீண்டும் அந்தப் பாதையால் அந்த நபர் திருப்பிக்கூட்டிச் செல்வதை அந்தப்பாதையில் தற்செயலாக அவதானித்த விழிப்புக்குழு தொடர்பான உறுப்பினர்கள் குறிப்பிட்ட மாட்டினைக்கொண்டு சென்ற அந்த நபர் மீது சந்தேகம் கொண்டு அதுபற்றி அவரிடம் ஆழமாக விசாரித்தனர். அப்பொழுது அது களவு மாடு என்பதும் இறைச்சிக்காகக் கொண்டு சென்று திருப்பிக்கொண்டு வரும் விடயமும் தெரிய வந்தது. அதுமட்டுமன்றி அந்தவிழிப்புக் குழுவினரால் மாடு மீட்கப்பட்டு பின்பு நீதி மன்றத்தினூடாக முறைப்படி மாடு களவு போன பகுதியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறைப்பொலிசில் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்களையெல்லாம் அறிந்து பருத்தித்துறையிலும் பின்பு வல்வெட்டித் துறைப்பொலிஸ் நிலையத்திலும் சென்று தனது மாட்டினை இனம் காட்டிய உலககுருநாதஐயர் அவர்கள் தினமும் மாட்டிற்கு தேவையான உணவு முதலியவற்றை வீட்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சென்று வழங்கி துன்பப்படாது பாதுகாத்தார்கள். இவ்வாறு வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு இரண்டு வாரங்களின் பின் முறைப்படி உலககுருநாதஐயர் அவர்களிடம் மாடு ஒப்படைக்கப்பட்டது தற்பொழுது மீண்டும் ஆலயத்திற்கு வழமையாகச்செய்யும தனது கடமைகளை அந்த மாடு ஆற்றி வருகின்றது.

**"அது சந்நிதியானுடைய மாடு அது சந்நிதியானிடமே திரும்பி வரும்"** என்று உலககுருநாதஜயர் கூறிய வாக்கை சந்நிதியான் தனது திருவிளையாடல் மூலம் நிறைவேற்றி விட்டான். ஆம். கொலைக்களத்துக்கே சென்றுவிட்ட நிலையிலும் சந்நிதியனுக்கு தொண்டு செய்த அந்த மாடு இறுதியில் சந்நிதியானிடமே வந்து சேர்ந்து விட்டது.

அதே நேரம் சமுதாயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த பஞ்சமா பாதக செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு குற்றம் இளைத்த ஒரு கும்பல் சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் அந்தப்பகுதி மக்கள் நிம்மதியாக வாழுவதற்கும் சந்நிதியானுடைய மேற்படி மாடுதான் காரணமாக இருந்துள்ளமையும் அதிசயமான நிகழ்வுகளே.

மேலும் இவ்வாறான ஒரு கும்பல் பருத்தித்துறைப் பகுதியில் விழிப்புக்குழு தொடர்பானவர்களிடம் அகப்பட்டுக்கொண்டது பற்றி பத்திரிகையில் செய்திகள் வெளிவந்ததும் இங்கே குறிபிடத்தக்கது.

ஆம்! சந்நிதியான் சஞ்சலம் தீர்க்கின்ற தெய்வம் மட்டுமல்ல தப்புச் செய்தவர்களை தண்டிக்கின்ற தெய்வம் என்பதை மாட்டினைக் களவு எடுத்தவர்கள் அறியாது இருந்தமை பரிதாபமான விடயமே. சந்நிதியான் கலியுகக்கந்தன் பக்தி செய்கின்ற பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்துகின்ற அதே கடவுள் பாதகர்களுக்கு படிப்பினையையும் ஏற்படுத்துபவன் என்பதற்கு மேற்படி சம்பவம் சிறு உதாரணமாகும்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பத்து

பூசை அபிஷேகம் என்பன சந்நிதியில் நடைபெறும் பொழுது தினமும் தவில் வாசிக்கின்ற அன்பர்தான் திரு. சிவசம்பு அமிர்தலிங்கம். யாரிடமும் எந்தவிதமான பலனையும் எதிர்பாராது தன்னுடைய தொண்டினை ஒரு இறைபணியாக நினைத்து உளப்பூர்வமாகவும் மலர்ந்த முகத்துடனும் தொடர்ந்து இவர் மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் திரு. சிவசம்பு அமிர்தலிங்கம் அவர்கள் ஸ்ரீ செல்வசந்நிதி ஆலயத்தில் இடம் பெறும் கந்தபுராணப் படிப்பிலும் ஒரு ஓதுவாராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இவர் ஆலயத்திற்கு செய்கின்ற பங்களிப்பும் மேற்கொண்டு வருகின்ற பணிகளும் மிகவும் மகத்துவமானவை இறையடி சேர்ந்த முருகேசு சுவாமிகள் அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றிக் கதைக்கும் பொழுது இவர் முருகனுடைய ஆள்! இவருக்குக்கிட்ட நாங்கள் நிக்கமுடியுமா? என்று புன்சிரிப்புடன் கூறுவார்.



**சி. அமிர்தலிங்கம் அவர்கள்**

திரு அமிர்தலிங்கம் அவர்கள் பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் கடமையாற்றியவர். 1986ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பின் சந்நிதியானிடம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான பணிகளையெல்லாம் மேற்கொண்டு வருகிறார். இந்த வகையில் இவருடைய சிந்தனையும் செயலும் எப்பொழுதும் சந்நிதியானுடன் தொடர்புபட்டதாகவே இருக்கமுடியம் என்பதை அன்பர்கள் உணர்ந்து கொள்வது கடினம் அல்ல. அதே போல முருகேசு சுவாமிகள் கூறியது போன்று சந்நிதியானும் இவருடைய உள்ளத்திலும் உணர்விலும் கலந்திருக்கின்றார் என்பதிலும் வியப்பேதும் இல்லை. என்பதையும் அன்பர்கள் உணர்ந்து கொள்ள முடியும். மேலும் இவருடைய மனைவியும் காவி உடை உடுத்து சந்நிதியானது அடியவராகவே வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்த பொழுதிலும் 2000 ஆண்டளவில் திரு. அமிர்தலிங்கமும் அவரது மனைவியும் தமது பிள்ளைப் பாசத்தால் அமெரிக்காவில் இருக்கும் தமது பிள்ளைகளிடம் செல்வதற்கும், முடிந்தால் அங்கேயே தங்குவதற்கும் முடிவு செய்து தமது பிள்ளைகளின் அழைப்பை ஏற்று இருவரும் கொழும்பு சென்று அமெரிக்காவிற்குச் செல்வதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

திரு. திருமதி அமிர்தலிங்கம் ஆகிய இருவரும் 70 வயதைத் தாண்டியவர்கள். சந்நிதியில் இருக்கின்ற பொழுது எவ்வித வருத்தங்களாலும் பாதிக்கப்படாது சுகதேகியாக வாழ்ந்தவர்கள். தற்பொழுது கொழும்பில் தங்கியிருந்த இரண்டு மாத காலத்தில் பல்வேறு விதமான நோய்களினால் இருவரும் பாதிக்கப்படலாயினர். பருத்தித்துறையிலிருந்து தற்பொழுது கொழும்பில் வைத்தியசாலை நடாத்தி வரும் டாக்டர் முருகானந்தம் அவர்களிடம் சிகிச்சை பெற்றனர். அவருடைய ஆலோசனைப்படி டெல்மன் ஆஸ்பத்திரியிலும் வைத்திய பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை பெற்றார்கள். இருவருக்கும் நோய் குணமடைவதற்கு மாறாக நோய் அதிகரிக்கின்ற அறிகுறியே தென்பட்டது. உடலும் உள்ளமும் சோர்வடைந்தன இருவரும் குழப்பமான மனநிலையில் காணப்பட்டனர்.

இந்த நிலையில் திரு. அமிர்தலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனது மனதில் ஆழமான ஓர் இடத்தில் தான் சந்நிதியானை விட்டுச்செல்கின்றேனே என்ற ஓர் ஆதங்கம் சந்நிதியானை விட்டு கொழும்புக்கு வருகின்ற பொழுதே இருந்ததைப்பற்றி மீட்டுப்பார்க்கலானார். தற்பொழுது அந்த ஆதங்கம் விஸ்வரூபம் எடுத்து அவரது உள்ளம் முழுவதையும் நிறைத்திருப்பதையும் உணர்ந்து கொண்டார். அவ்வாறு தான் சந்நிதியானை விட்டுச் செல்வதை சந்நிதியானும் விரும்பவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டார். அதனுடைய விளைவுதான் இந்த நோய்நொடிகள் என்பதையும் சிந்திக்கலானார்.

சரி சந்நிதியான் தாங்கள் பயணம் செய்வதை விரும்பவில்லை தன்னுடனேயே தங்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டால் அதனை தனக்கு வெளிப்படுத்தலாம்தானே அதனைச் சந்நிதியான் தானே எமக்குக்கூற வேண்டும் என்பதை சிறு பிள்ளைகள் கதைப்பதைப்போன்று தனது மனைவிக்கு எடுத்துக்கூறினார்கள். அவரது மனைவியும் சிரித்தபடி இதையெல்லாம் எம்பெருமான் எம்மிடம் வந்து கூறத்தான் முடியுமா? என்று அமைதியாக தனது பதிலைக் கூறிமுடித்தார்கள்.

சந்நிதிவேலன் உள்வீதி உலாவந்து வெளிவீதிக்குச் செல்வதற்காக மடப்பள்ளிக்கும் காண்டாமணிக் கோபுரத்திற்கும் இடையில் உள்ள அந்தப் பாதையில் வெளிவீதி நோக்கி வந்துகொண்டிருக்கிறார். அடியார்களும் எம்பெருமானை பின் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களுடன் பூசகர் ஆ.சிவசண்முகஐயர் பஞ்சாராத்தியுடனும் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தீவட்டியுடனும் சென்றுகொண்டிருந்தனர். ஆனாலும் சிவசண்முகஐயர் திரு. அமிர்தலிங்கத்தைத் தொடர்ந்து செல்லவிடாது அவரது கையைப் பிடித்து நந்திக்கு எதிராகவுள்ள வெளிமண்டபத்திற்கு இழுத்துச்சென்று அவரை தன்னுடனேயே நிற்குமாறு நிற்பாட்டி வைக்கிறார்கள்.

இந்த நிலையில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சிவசண்முகஐயரிடம் சுவாமி வெளியே செல்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இங்கே நிற்கின்றோம் என்று கேட்டபொழுது **நான் சொல்வதைக்கேள் நீ இங்கே என்னுடன்தான் நிற்கவேண்டும் வேறு எங்கும் செல்லக்கூடாது.** என்று கூறிமுடித்தார்கள். இதனைக் கேட்ட திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நித்தரையிலிருந்து துடிதுடித்து எழும்புகின்றார். தேகம் புள்ளரித்து காணப்பட்டது. ஆம்! அச்சந்நிதியான் தான் கேட்டது போலவே தன்னுடனேயே நிற்குமாறு தனது மதிப்பிற்குரிய பூசகர் சிவசண்முகஐயர் மூலம் கனவிலே விடை தந்துள்ளதை நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.



சந்நிதியான் பிரதம பூசகராக கனவில் உருவெடுத்து வந்த ஆ. சிவசண்முக ஐயர்

விடிந்தவுடன் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அமெரிக்காவில் இருக்கும் தனது மகனுக்கு தொலைபேசி மூலம் சந்நிதியான் தன்னை அழைக்கின்ற செய்தியை அறிவித்து விட்டு உடனடியாகவே சந்நிதியானிடம் திரும்புவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடலானார்.

அவரது துணைவியாரைத் தொடர்ந்து 2011இல் திரு. அமிர்தலிங்கமும் இறைபதம் அடைந்து விட்டாலும் அவர்களது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் தொடர்ச்சியாக சந்நிதியானது அடியவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஓம்முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பதினொன்று

சந்நிதியான் ஆச்சிரமம் ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அன்னதானப் பணியைச் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றதென்பதை அனைவரும் அறிந்திருந்தாலும் அவை தொடர்பான சில விடயங்களை உற்சவ காலமாகிய இக்காலகட்டத்தில் அடியார்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானதொன்றாகும்.

1986ஆம் ஆண்டு ஆலயச் சுழலில் ஏற்பட்ட வன்செயலைத் தொடர்ந்து சிறிதுகாலம் ஆலயத்தின் நித்திய பூசை அன்னதானப்பணி என்பன எல்லாம் தடைப்பட்டிருந்தன. ஆனாலும் சில மாதங்களின் பின் நித்திய பூசை ஆரம்பித்தபொழுது சிதைவுகளின் மத்தியிலும் குறிப்பிட்ட ஓர் இடத்தைத் தெரிவு செய்து சந்நிதியான் ஆச்சிரமம் தனது அன்னதானப்பணியை ஆரம்பித்தது. அந்தச் சூழலில் அன்னதான செயற்பாட்டை செயற்படுத்துவதற்கான பொருளாதார நிலை உட்பட அனைத்து விடயங்களும் கடினமானதாகவே இருந்தது. ஆனாலும் இவ்வாறான கஷ்டநிலை சில வருடங்கள் அங்கே தொடர்ந்து நீடித்தது. ஆனாலும் உற்சவகாலத்தில் இடம்பெறும் அன்னதானச் செயற்பாட்டிற்கு உதவுகின்ற அன்பர்கள் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அந்த உதவிகளை வழமைபோல வழங்கியே வந்துள்ளனர். இது சந்நிதியான் மேல் அவர்கள் கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதே போல ஆச்சிரமும் அவ்வாறு உதவுகின்ற அன்பர்களின் பங்களிப்பு விபரங்களை ஞானச்சுடரில் தொடராக வெளியிட்டு வருவதையும் அன்பர்கள் அவதானிக்கலாம்.

ஆச்சிரமத்தில் உள்ள எம்மை பொறுத்தவரை சந்நிதியில் உற்சவம் ஆரம்பிப்பதென்பதும், அது திருப்தியாக நிறைவேறுவது என்பதும் இரண்டு விடயங்களுடன் தொடர்புபட்டதென நாம் நம்புகின்றோம். ஒன்று ஆலயத்துடன் தொடர்பு பட்ட பல்வேறு வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைங்கரியங்கள் சிறப்பாக நடந்தேறுவது இரண்டாவது உற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு வழங்கப்படுகின்ற அன்னதானம் எந்த அளவிற்கு திருப்தியாக வழங்கப்படுகின்றது என்பதாகும். தற்பொழுது ஆச்சிரமத்தின் அன்னதானச் செயற்பாடுகளுக்கு போதியளவு உதவிகள் கிடைத்தாலும் வரையறுக்கப்பட்ட இடவசதியுடன் ஆகக்கூடிய அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி அவர்களை திருப்தியுடன் வழியனுப்புவதென்பதுதான் ஆச்சிரமத்திற்கு முக்கிய பொறுப்பாக உள்ளது. இத்தகைய முக்கிய பொறுப்பை இலகுவாக நிறைவேற்ற முடியாதென்பதும் அனைவரும் அறிந்த விடயமாகும்.



**சந்நிதியான் ஆச்சிரம செயற்பாடுகளுக்கு பலவகையிலும் பங்காற்றிவரும் பபா சுவாமிகள் ஆச்சிரம சுவாமிகள் மோகனதாஸ் மற்றும் நூராசிரியர் - 2014**

மேலும் உற்சவ காலத்தில் நேர்த்திக்காக அன்னதானம் வழங்க வேண்டுமென்று ஆச்சிரமத்திற்கு வருபவர்களுடைய தேவையை நிறைவு செய்வது, கரகம் காவடி போன்ற கைங்கரியங்களை நிறைவேற்ற வருபவர்கள் குறிப்பிட்ட நிதியை வழங்கி தமக்கும் தம்முடன் வருபவர்களுக்கும் அன்னதானம் வழங்குமாறு வேண்டிக்கொள்ளும் பொழுது அவர்களின் விருப்பங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்தல் போன்ற செயற்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தவேண்டிய கடப்பாடு ஆச்சிரமத்திற்குண்டு. இவை எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் உற்சவகாலத்தில் நடைமுறைப்படுத்துவது உண்மையில் மிகமிகக் கடினமான காரியமாகும்.

உற்சவத்தின் இறுதி நாட்களில் மாலை 5 மணிவரை கூட அன்னதானம் வழங்கப்படும் நிலை ஏற்படுவதுண்டு. அந்தச்சந்தர்ப்பத்தில் நாம் ஓய்வின்றி செயற்பட்டாலும் பல்லாயிரக் கணக்கான அடியவர்களுக்கு அன்னதானத்தை நிறைவாக வழங்கினோம் என்ற திருப்தியுடன் களைப்பையும் மறந்து எல்லாவற்றையும் மீள் ஒழுங்குபடுத்தி அன்னதானம் வழங்கிய தளம் என்பவற்றை எல்லாம் கழுவி அன்னதானத்தை முழுமையாக நிறைவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவோம். அப்பொழுது யாரும் ஒருவர் **ஐயா! சுவாமி! பசிக்கின்றது அன்னதானம் இருக்கின்றதா** எனக்கேட்டு வருவதுண்டு.

அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் சுவாமிகள் மிகவும் பயபக்தியுடன் அவ்வாறு வருபவர்களைக் கூட உற்று நோக்கி அவர்களது நிலமைகளைக் கேட்டறிவார். அதே நேரம் அவர்களுக்கு ஏதாவது கொஞ்சமேனும் அன்னதானம் வழங்கக்கூடிய சாதம் என்பன உள்ளுக்கு இருக்கின்றதா என்பதையும் நன்கு கவனிப்பார் அவ்வாறு கவனித்து உண்மையில் சாதம் வழங்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் கழுவிய மேடையிலேயே ஒரு ஓரத்தில் வந்தவரை இருத்தி அவருக்கும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்வார். இது பற்றி யாரும் ஆச்சிரமத்தின் சுவாமிகளைக் கேட்டால் அவர் பின்வருமாறு கூறுவார்.

**"இப்படியான சந்தர்ப்பத்தில் இப்படியான உருவத்தில் தான் சந்நிதியான் இங்கே வருவான் நாங்கள் சரியாக அன்னதானம் வழங்குகின்றோமா என்று பார்வையிடுவார். ஆகையால் கடைசி வரைக்கும் நாங்கள் சரியாகத்தான் இங்கே செயற்பட வேண்டும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஆச்சிரமத்தின் சுவாமிகள் கூறுகின்ற கூற்று ஒரு சாதாரண கூற்றுப்போல சிலருக்குத்தெரியக்கூடும் ஆனால் இதுதான் உண்மை என்பதை சந்நிதியானுடன் ஆழமாக ஈடுபாடுகொண்டுள்ள அன்பர்கள் நன்கு அறிவார்கள். அடியேன் ஆச்சிரமத்தின் அன்னதானச் செயற்பாடுகள் வாராந்த வெள்ளி நிகழ்வுகள் மாதாந்த ஞானச்சுடர் வெளியீடு அங்கு இடம்பெறும் சமூகப் பணிகள் யாவற்றிலும் பங்குகொண்டு நீண்ட காலம் தொண்டாற்றி வந்ததினால் இவ்வாறான சம்பவங்களை எல்லாம் நேரடியாக உணர்கின்ற வாய்ப்புக்களையும் அனுபவங்களையும் சந்நிதியான் அடியேனுக்கு ஏற்படுத்தியது சந்நிதியானது பெருங்கருணையாகும். இதன் தொடர்ச்சியாகவே சந்நிதியானது அருளாசியுடன் புலம்பெயர்ந்த நிலையிலும் இவ்வாறான பணிகளை அடியேனால் தொடரமுடிகின்றது.

மேலும் கலியுகக் கந்தனாகிய சந்நிதியான் மருதர் கதிர்காமருக்கு **"உற்சவ காலங்களில் பத்தாம் திருவிழாவிற்கு பிற்பட்ட நாட்களில் சாதாரணமானவர்களில் ஒருவர் போல நானே உலாவி எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வேன்"** என்று வாக்குக்கொடுத்த சம்பவத்தையும் இவ்விடத்தில் அடியார்கள் மனதில் கொள்வதன் மூலம் மேற்படி நிலமையை நன்கு விளங்கிக்கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

ஆம்! ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அன்றாட பூசைச் செயல்பாடுகள் எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று அங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னதானச் செயற்பாடுகளும் முக்கியமாவை. இது காலங்காலமாக அங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற வரலாற்று நிகழ்வாகும்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாகம் நான்கு நூல் வெளியீடு கனடா ஸ்ரீ
செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2013இல் இடம்பெற்றது.
பாரியர் சகிதம் பிரதம பூசகர் உற்சவ உபயகாரர்
மற்றும் நூலாசிரியர்



கனடா ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் 8-8-2015இல்
திருவாசக முற்றோதல் நிறைவுபெற்ற பின் அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின் அற்புதங்கள் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. கலியுகக் கந்தன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும் எமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட அறிவுக்குட்பட்டு எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட ஒருவகையில் உங்களுக்குக் கிடைத்த ஒரு பேறுதான் என்பதை இதனை உணர்வுடன் வாசிக்கும் பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

-ஆசிரியர்-

அடியார்கள் இந்நூலை வாசித்து சந்நிதியான் திருவருளைப் பெறுவதற்கு வாழ்த்தும்.....


• RESIDENTIAL • COMMERCIAL • INDUSTRIAL

GTA

EXTRON ELECTRIC & PLUMBING LTD.

**ELECTRICAL**

- Complete Residential & Commercial Wiring
- Fuse to breaker panel upgrading 60A to 400A
- Knob & Tube Rewiring
- New & Relocated Electrical Distribution

**PLUMBING**

- Appliances Installation • In-floor heating systems
- New Construction Residential & Commercial
- Back flow preventer installer
- In-Ground & above-ground piping installations

**Master Electrician Karan Tel: (416) 805 6144.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org